ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 37] [இதழ் 1

பிங்கள ஆண்டு கார்த்திகைத் திங்கள்

10—12—77



உ
குருபாதம்

" ஞானசம்பந்தம் "

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 37 || 10-12-77 || இதழ் 1

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ
குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

நீள் நாள் பிறந்திறந்து
  நின்றதுயர் நீயறிவை
வீண் நாள் கழித்து
  விடாமலே—பூண அருள்
நண்ணரிய பேரின்ப
  நாடி அதுவாக
அண்ணலே சொக்கநா தா.

- சொக்கநாத வெண்பா-35

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியார்

உட்பொருள்

எண்		பக்கம்
1	துயர் துடைக்கத் துணை செய்வோம்... ...	1
2	அன்னை அருள்மாலை ...	6
3	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ...	7
4	" சத்தியங்கள் மலரட்டும் " ...	10
5	ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு ...	11
6	சைவ சமயச் சிறப்பு ...	12
7	அட்டைப்பட விளக்கம்	16
8	திருப்பாற்றுறை திருஆனைக்கா தலச் சிறப்புக்கள் ...	17
9	மெய்கண்ட நூல்கள் ...	27
10	அறுவகைச் சமயங்கள்	33
11	தர்மகர்த்தா முறையைக் கடைப்பிடிக்கவேண்டும்	35
12	அகத்திக்கீரை ...	36
13	செய்திகள் ...	40
14	எதிர்காலம் ...	44
15	துயர் துடைக்கும் பணிகளில் தருமையாதீனம்...	51
16	மலை அலையில் கண்ட பெருந்தீ ! ...	52
17	தருமையாதீனம் " ஞானசம்பந்தம் பதிப்பகத்"தின் புதிய வெளியீடுகள் ...	53

உ

சிவமயம்

"ஞானசம்பந்தம்"

முப்பத்தேழாவது ஆண்டு மலர்ப் பொருளடக்கம்

எண்		பக்க எண்
1	அகத்திக்கீரை	36
2	அட்டைப்பட விளக்கம்	16, 121
3	அப்பர்சுவாமிகள் குருபூஜை விழா	232
4	அருள்ஞானக்கொடை	338
5	அருள்திரு. பாம்பன் அடிகளார்	406
6	அரைக்கோடி அர்ச்சனை நிறைவு விழா	211
7	அறநிலையச்சொத்து அனுதைச் சொத்தல்ல	219
8	அறுவகைச் சமயங்கள்	33
9	அன்னை அருள்மாலை	6, 66, 148, 153, 199, 266, 280, 312, 357, 402, 538, 571
10	ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு	11, 90, 160, 200, 233, 253, 290, 325, 378
11	ஆலய நிதியை முறைப்படுத்திப்பயன்படுத்தச்சட்டம்வரும்	366
12	ஆலய நில வருமானத்தை அபிவிருத்தி செய்ய இயலுமா	575
13	ஆவணிமூல விழாவில் திரு. எஸ். மகராஜன் ஆற்றியஉரை	502
14	இறைவனின் இன்னருள் திறம்	181
15	இறைவா உன் ஆலயத்தில்	281, 358, 464, 518, 565
16	உருத்திராக்கத்தின் தோற்றமும் அதன் பெருமையும்	247, 287, 321, 372, 411
17	எதிர்காலம்	44, 101, 166, 213, 261, 294, 334, 384, 433, 485, 532, 582

எண்		பக்க எண்
18	கந்தபுராணம் சிந்திப்போம்	539
19	கடவுட் கொள்கை	122
20	கடவுளும் தெய்வங்களும்	458
21	கடிதங்கள்	201, 252, 421, 478
22	காசினிக்கீரை	364
23	காரைக்காலம்மையாரும் புரந்தரதாசரும்	67
24	கீர்த்தனை	424
25	குத்தகை பாக்கியைச் செலுத்தக் கோரிக்கை	572
26	குமரகுருபரரின் வியத்தகு வேண்டுகோள்	151
27	குரங்கும் குரங்காட்டியும்	240
28	குருபெயர்ச்சி	346, B.
29	குருலிங்க சங்கமம்	313
30	குருவருள் பெற்றுக் குவலயம் வாழ்க	267
31	குழந்தைக்குப் பால்கொடுக்க மறுத்தால் புற்று நோய்	509
32	கோயிலுக்குச்சொந்தமான கடையை வாடகைக்காரர் வேறு ஒருவருக்கு மாற்றிக்கொடுக்க ரூபாய் லட்சம்	369
33	கோயில் சொத்தைக் கபளீகரம் செய்வதா	533
34	சக்ரவர்த்திக்கீரை	315
35	சத்தியம் கரைந்தது	418, 433
36	சத்தியங்கள் மலரட்டும்	10
37	சட்டமும் நடைமுறையும்	171
38	சிவபஞ்சாக்கரத்துதி	376
39	சிவபுண்ணியங்கள்	148
40	சிவபோகசாரம்	126, 184, 245
41	சிவமூர்த்தங்கள்	403, 461
42	சிறுகீரை	197
43	சுண்டைக்காய்	70
44	செய்திகள்	40, 91, 161, 203, 254, 291, 326, 379, 425, 480, 527, 580

எண்		பக்க எண்
45	சேயை வளர்க்கும் அரசு தாயையும் வளர்க்கட்டும்	57
46	சைவ சமயச் சிறப்பு	12, 85
47	ஞானசம்பந்தம் பதிப்பகம் புத்தக விலைப்பட்டியல்	107
48	தமிழ்நாடு விவசாய உயர்மட்டக்குழு மெமோரண்டம்	523
49	தர்மகர்த்தா முறையைக் கடைப்பிடிக்க வேண்டும்	35
50	தருபவன் ஒருவன் வேண்டும்	549
51	தருமையாதீனக் குருபூஜை விழா நிகழ்ச்சி நிரல்	க
52	தருமையாதீனம் ஞானசம்பந்தம் பதிப்பகத்தின் புதிய வெளியீடுகள்	53
53	தாயை வஞ்சிக்கலாமா ?	439
54	தியானம் செய்ய அதிசயக் கருவி	371
55	திருஈங்கோய்மலைத் தலச் சிறப்புக்கள்	129
56	திருக்கடவூர் திருக்கோயில் தூப தீப அறக்கட்டளை வேண்டுகோள்	156
57	திருக்கருகாவூர் – திருப்பாலைத்துறைத் தலச் சிறப்புக்கள்	507
58	திருக்குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டம் அறநிலையங்கள் பற்றிய தீர்மானங்கள்	477
59	திருச்சோற்றுத்துறை – திருவேதிகுடித் தலச் சிறப்புக்கள்	397
60	திருத்தென்குடித்திட்டை – திருப்புள்ளமங்கை – திருச்சக்கரப்பள்ளித் தலச் சிறப்புக்கள்	447
61	திருப்பராய்த்துறை – திருக்கற்குடித் தலச் சிறப்புக்கள்	187
62	திருப்பாற்றுறை – திருவானைக்காத் தலச் சிறப்புக்கள்	17
63	திருப்பூந்துருத்தி – திருக்கண்டியூர்த் தலச் சிறப்புக்கள்	347
64	திருப்பைஞ்ஞீலித் தலச் சிறப்புக்கள்	73
65	திருமுருகப்பெருமான் தசபங்கி	422
66	திருநல்லூர் – திருஆவூர்ப்பசுபதீச்சரத் தலச் சிறப்புக்கள்	556
67	திருநெடுங்களத் தலச் சிறப்பு	229
68	திருநெடுங்களம் – திருஎறும்பியூர்த் தலச் சிறப்புக்கள்	275
69	திருநெறியத் தெய்வத் தமிழ் மாநாடு	284
70	திருவாரூர் பன்னிரு திருமுறை மன்றம் நிறைவேற்றிய தீர்மானங்கள்	505

எண்		பக்க எண்
71	திருவிளக்கு அறக்கட்டளை நிதி	96, 128, 212, 417
72	தில்லைத் திருப்பணிக்கு உதவ வாரீர்!	299
73	துயர் துடைக்கத் துணைசெய்வோம்	1
74	துயர் துடைக்கும் பணிகளில் தருமையாதீனம்	51
75	பங்குனிமாதச் சிறப்பு நாட்கள்	218
76	பருப்புக்கீரை	238
77	பல்கேரியமொழி சில படிப்பினைகள்	149
78	பாம்பு தீண்டிய பெண்ணைக் காப்பாற்ற இருபத்தாறு கோழிகள் சாவு	472
79	பார்வையாளர் குறிப்பு	61, 69, 142, 165, 180, 196, 415, 424, 457
80	புத்தாண்டே வருக	228
81	பொங்கல் வாழ்த்து	66
82	மலையலையில் கண்ட பெருந்தீ	52
83	மாண்புமிகு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் பேசியது	469
84	மார்கழிமாதச் சிறப்பு வழிபாடு	97
85	மீண்டும் சில வேண்டுகோள்	339
86	முளைக்கீரை	146
87	மெய்கண்ட நூல்கள்	27, 81, 138, 198, 235
88	மேலைத்திருக்காட்டுப்பள்ளி – திருவாலம்பொழில் தலச் சிறப்புக்கள்	307
89	வம்பில் பழுத்த ரசக்கனி	317
90	வழிபட்டு உய்வோம்	491
91	வினைப்பலன்கள்	416
92	வெயில்மூலம் காரில் குளுகுளு வசதி	368
93	வேண்டுகோள்	470
94	வேர்க்காலுக்குநீர்	113
95	ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை	7, 62, 118, 176, 225, 271, 303, 344, 394, 444, 496, 544
96	ஜனாதிபதியின் தத்துவம்	389

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்



தம்திருப்பேர் தாங்கிவரத் தண்கருணை பாலித்த
நம்முடைய முதற்குரவர் ஞானசம்பந்தர்.

உ
சிவமயம்

தருமையாதீனம்

"ஞானசம்பந்தம்" திங்கள் இதழ் சந்தாதாரர்களுக்கு

ஓர் அறிவிப்பு

தருமை யாதீனத்திலிருந்து திங்கள்தோறும் மலர்ந்து செந்தமிழ் மணமும் சிவமணமும் பரப்பி சிவஞானத்தேன் நிறைந்து கற்போர் கருத்தைக் கவர்ந்துவரும் "ஞானசம்பந்தம்" முப்பத்தாருவது ஆண்டின் நிறைவைப்பெற்று முப்பத்தேழாவது ஆண்டின் தொடக்க இதழாக மிக்க எழிலுடன் வெளிவருகிறது.

அச்சுத் தொழிலுக்குரிய பொருள்களின் விலையேற்றத்தால் சந்தாத் தொகையில் சிறிது மாற்றம் செய்யப்பெற்றுள்ளது. பழைய சந்தாதாரர்கள் இச்சந்தா உயர்வை ஏற்றுத் தனி அறிவிப்பை எதிர்பாராமல் மீண்டும் தொடர்ந்து ஆண்டுக் கட்டணம் செலுத்தியும், புதிய சந்தாதாரர்களாகச் சேரவிரும்புவோர் கீழ்க்காணும்முகவரிக்கு ஆண்டுக் கட்டணம் அனுப்பியும் "ஞானசம்பந்தம்" இதழைப் பெற்றுக் கற்றுப் பயனுறுவார்களாக.

வேலை மிகுதியினுலோ அல்லது மறதியினுலோ ஆண்டுச் சந்தா செலுத்துவதில் தடை ஏற்படலாம். தடையில்லாமல் "ஞானசம்பந்தம்" பெற வாய்ப்பு

அளிக்கும் முறையில் ஆயுள் சந்தா ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. ஆயுள் சந்தா அறிவிப்புச் செய்தது முதல் இன்றுவரை ஐந்நூற்று முப்பது அன்பர் களுக்கு மேலாக ஆயுள் சந்தா செலுத்திப் பலர் ஆயுள் உறுப்பினராகி உள்ளவர்.

ஆயுள் சந்தா செலுத்தினால் அவர்களது வாரிசு களும் "ஞானசம்பந்தம்" பெற வசதி செய்து தரப் படும். மேலும் தமது ஆயுள் சந்தாவை மற்றவர் களுக்கோ, கல்வி அறநிறுவனங்களுக்கோ மாற்றிக் கொடுக்க விரும்பினால் அதற்குரிய ஏற்பாடுகளும் செய்துதரப்படும்,

இவ்வரிய வாய்ப்பைப் பயன்படுத்தி ஆயுள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து "ஞானசம்பந்தம்" பெற்றுப் பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறோம். இன்றே உங்களை ஆயுள் உறுப்பினராக்கிக் கொள்ளுங்கள்.

சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா (உள்நாடு)	ரூ.	7—00
ஆண்டுச் சந்தா (சிலோன்)	ரூ.	9—00
ஆண்டுச் சந்தா (வெளிநாடு)	ரூ.	15—00
ஆயுள் சந்தா	ரூ.	100—00

அஞ்சற் செலவின் அதிகம் காரணமாக உள்நாட்டுச் சந்தாவைவிட சிலோன், வெளிநாடு இவற்றின் சந்தாத் தொகையில் அதிகம் காணப்படு கிறது.

கட்டணம் அனுப்பவேண்டிய முகவரி:—

செயலாளர்,

ஞானசம்பந்தம் செயலகம்,

தருமபுரம், மாயூரம் 609 001

தஞ்சை மாவட்டம்,

தருமையாதீனம் 24 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

ஞான சப்பந்த நல்லிதழைத் தோற்றுவித்த
ஞான குரவர் நற்றிருத்தாள் போற்றுதுமே.

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்



இருபத்தா றரையாண்டு இவ்விதழை வளர்த்திட்ட
குருகயிலைச் சுப்ரமண்ய குரவரது அருளுருவம்.

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 37 | பிங்கள - கார்த்திகை - 10—12—77 | இதழ் 1

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

துயர்துடைக்கத் துணைசெய்வோம்

துயரத்தில் பங்கு :

தென்னாட்டில் அண்மையில் பெய்த பெருமழையும், அதனால் விளைந்த வெள்ளப்பெருக்கும், அடுத்தடுத்து வீசிய இருபெரும் புயலும், கடந்த நூறாண்டுகளில்காணாத பேரழிவினை விளைத்தன. ஆயிரக்கணக்கான மக்களும், பல்லாயிரக் கணக்கான கால்நடைகளும், பலநூறுகோடி பொருள் இழப்பும் ஈரமுடையார் நெஞ்சை உலுக்கின. குறிப்பாகத் தமிழ்நாடு, ஆந்திரம், லட்சத்தீவுகள், கேரளத்தின் சில பகுதிகள் பேரழிவிற்குள்ளாயின. தமிழகத்தில் நாகைப் பகுதியிலும், திருச்சிராப்பள்ளியிலும், திண்டுக்கல் பகுதியிலும் பெரும் உயிர்ச்சேதத்தை விளைத்தன. உற்றாரையும், உடைமைகளையும் இழந்து வாடும் ஆயிரக்கணக்கான மக்களது பெருந்துயரத்தில் "ஞானசம்பந்தமும்" பங்கேற்கிறது. ஆதீனக் குருமுதல்வர்,

" ஆறுதலை இல்லை அடியேனுக் கன்பாகத்
தேறுதலைச் சொல்வார் சிலர் இல்லை — வேறெனக்குத்
திக்காரும் இல்லை சிவனே பழிக்கஞ்சி
சொக்கேநின் தானே துணை "

என்று அருளியவாறு இறைவன் திருவடிகளே துயர் உறுவோர்க்கு உண்மையான ஆறுதலை அளிக்கவல்லன.

இருவேறு மனநிலை :

இன்பமும் துன்பமும் இயற்கையின் நியதிகள். இவை காரணமாக மகிழ்வதும் வருந்துவதும் உலகியல்பு. இன்பத்தில் மகிழும் மனித இனம், துன்பத்தையும் இயல்பு என ஏற்கப் பழகவில்லை. தன்னியல்பில் என்றும் மாறாத இறைவன், உயிர்களின் புண்ணிய - பாவங்களுக்கு ஏற்ப இன்பத் துன்பங்களை மாறி மாறி வழங்குகின்றான். உலகியலில் தாய் - தந்தையரின் அரவணைப்பையும் - கண்டிப்பையும் நன்மைக்கே என்று அறியும் மனிதன், இறையருளால் நிகழும் இன்பத் துன்பங்களும் நம்மைத் தூய்மைப்படுத்தவே நம்மைச் சார்கின்றன என்பதை அறிவதில்லை இறைவனின் லீலாவிநோதங்களை அனைவரும் உள்ளவாறு அறிதல் என்பது இயலாது. தற்போது இயற்கையினால் விளைந்த பேரிழப்பிற்கு உண்மைக் காரணம் இது என்பதை ஆராய்வது, இந்நேரத்தில் பொருந்தாது. உயிர்க்கெல்லாம் தாயாக நிற்கும் பெருமான் இத்துயரத்திலிருந்து நம்மை என்றும் காப்பான் என்று திடமாக நம்புதலே நமது கடன்.

" தாயர் மகவருத்தம் சற்றும் தரியார்கள்
ஆயவினைக் கீடா அமைந்தாலும் — காயம்
பரிக்குந் துயரமெலாம் பார்க்கவுனக் கென்றும்
தரிக்குமோ சொக்கநா தா "

என்பது ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு.

ஒருங்கிணைந்த முயற்சி :

தமிழ்நாட்டில் நிகழ்ந்துவிட்ட பேரிழப்பை ஓரளவு ஈடு செய்து, மக்களை மீண்டும் வாழவைக்கும் முயற்சியில் அரசின் பெரும் பங்கினைப் பாராட்டுதல் நம் கடமை. மாநில அரசும் மத்திய அரசும் வெவ்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவையாயினும், மனிதாபிமானத்தில் அவை வேறுபட்டுவிடவில்லை.

இரண்டும் இணைந்து நின்று, இம்மாதிரி நேரத்தில் இப்படித் தான் உதவவேண்டும் என ஒரு முன்மாதிரியாக நிவாரணப் பணியில் ஈடுபட்டிருப்பது நம் நாட்டின் நல்விளைப்பயன் என்றே கருதவேண்டும். பாதிக்கப்பட்டோர்க்கு விரைந்து உணவு, உடை, குடிதண்ணீர் வசதி செய்தல்; நிவாரணக் குடியிருப்பு அமைத்தல்; சாலைகளைச் செப்பனிடல்; மின் வசதி அளித்தல் என முன்னணிப் பணிகளை அரசு சிறப்பாக இயற்றிவருவது ஆறுதலாக அமைகிறது. அரசுப்பணிக்கு மக்கள் அளித்துவரும் உதவிகளும் ஆறுதல் அளிக்கிறது.

இவர்களுக்காகவும் பிரார்த்திப்போம் :

உண்மையில் பாதிக்கப் பெற்றவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நிவாரணத்தை 'எரியும் வீட்டில் இழுத்தவரை லாபம்' என்பதுபோல, பாதிக்கப்பெறுதசிலர் அடையமுயல்வது கண்டிக்கத்தக்கது. இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடும் சமூக விரோதிகளை இனங்கண்டு, அவர்களைத் திருத்துவதில் நாம் அனைவரும் அரசோடு ஒத்துழைக்கவேண்டும். 'நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்' என்று அறிவுரை கூறவேண்டும். சிலர் பண விநியோகம் போன்றவற்றில் தவறுகள் செய்ய முயல்கின்றனர் எனச் செய்தித்தாளில் காணமுடிகிறது. இவ்வகையில் அரசின் விழிப்புணர்ச்சியும் உடனடி நடவடிக்கைகளும் நம்பிக்கையூட்டுகின்றன. இக்கருதீய எண்ணம் படைத்தோரைத் திருத்துவதும். திருத்தி நல்வழிப்படுத்துவதும், திருத்த இயலா இடத்து இத்தகையவர்களையும் திருத்தி நல்வழிப்படுத்தவேண்டி இறைவனைப் பிரார்த்திப்பதும் நல்லோர் கடமை.

மனங்கனிந்து உதவுவோம் :

கருணை என்பது பிற உயிர்களின் துன்பங்கண்டு இரங்குவது. இந்த இரக்க நிலையே மனித இனத்தின் சிறந்த பண்பு. நமது சகோதரர்கள் துன்பத்தில் வாடும்போது, நாம் மட்டும் மகிழ்ந்திருப்பது அறமாகாது. பிரம்மாண்டமான துயர்துடைக்கும்பணியில் நமதுபங்கு என்னஎன்று கேட்டுக்கொண்டு ஆரவாரம்இல்லாது இயன்றவரை உதவுவதே கடமையாகும். 'ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே செல்லும்வாய் எல்லாம் செயல்' என்பது தமிழ் மறை. 'இரப்பவர்க்கு ஈயவைத்தார், ஈபவர்க்கு அருளும் வைத்தார், கரப்பவர் தங்கட்கெல்லாம் கடு நரகங்கள் வைத்தார்' என்பது அப்பரடிகள் அருள்வாக்கு. 'நிதிமிகுந்தவர்

பொற்குவை தாரீர், நிதி குறைந்தவர் காசுகள் தாரீர், ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர், அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளீர்' என்ற பாரதி வாக்கினை அன்பர்கள் நினைவுகூர்ந்து இயன்றவாறெல்லாம் துயர் துடைப்புப் பணியில் ஈடுபடுதல் அறம் மட்டுமன்று; மனிதப்பண்பும் ஆகும்.

ஆரவாரமற்ற தொண்டு :

"அறங்கள் அறங்களுக்காகவே; ஆரவாரத்திற்காக அல்ல" என்பது தருமையாதீனத்தின் குறிக்கோள். உண்ணவும், உடுக்கவும் ஏதுமின்றித் தவித்தபோது, நாகைப் பகுதியில் பத்தாயிரக் மக்களுக்கு உணவளித்தும், பத்தாயிரம் மதிப்புள்ள உடை வழங்கியும் அருள் பாலித்தது தருமைக் குருமணியின் அருள் உள்ளம். பெரு வெள்ளத்தால் பாதிக்கப்பெற்ற ஆயிரக் கணக்கான மக்களுக்கு, ஆதீன அருளாட்சியில் திகழும் திருக் கோயில்களில் புகலிடம் தந்து, உணவளித்து உதவியது. குறிப்பாகத் திருச்சிராப்பள்ளி மௌனமடம், உய்யக்கொண்டான் கற்குடிமாமலை, ஆச்சாள்புரம், திருப்பனந்தாள், வைத்தீசுவரன் கோயில் போன்ற தேவஸ்தானங்கள் பல்லாயிரவருக்கு உணவும் உறைவிடமும் வழங்கின.

வெள்ளத்தில் வீரசடையான் கோயில் :

புயலும், வெள்ளமும், சமயத்துறையிலும் பெரும் இழப்பினை உண்டாக்கிவிட்டன. தேவாரப் பாடல்பெற்ற தலங்கள் சைவர்களுக்கு உயிர் போல்வன. கொங்குநாட்டுப் பாடல்பெற்ற திருத்தலங்கள் ஏழு. இவற்றுள் ஒன்று கருருக்கு அருகில் உள்ள திருவெஞ்சமாக்கூடல். குடகனாறு, சிற்றாறு என்னும் இரு ஆறுகள் கூடுமிடத்தில் இத்தலம் உள்ளது. குடகனாற்று அணை உடைப்பால், இத்திருத்தலம், பெரும்பாலும் அழிந்துவிட்ட நிலையில் உள்ளது. இறைவனின் இலிங்கத்திருமேனி தவிர, எஞ்சிய திருமேனிகள் பலவும் சிதிலமடைந்திருப்பது பெரிதும் கவலையைத் தருவதாக உள்ளது. அரசும், அறநிலையத்துறையும் எடுக்கும் நன் முயற்சிகளுக்குச் சைவப்பேரன்பர்களும் துணைநின்று, வெஞ்சமாக்கூடல் திருக்கோயிலை மீண்டும் உருவாக்குதல் இன்றியமையாதது. இதையடுத்து தருமையாதீன அருளாட்சிக்கு உட்பட்ட திருக்கோளிலி என்னும் திருக்குவளைத் திருக்கோயில் புயலின் கோரப்பிடியில் சிக்கியது. கோபுர கலசம் வீழ்ந்தது; வசந்த மண்டப மேற்கூரை பறந்தது; சுற்றுக்கோயில்கள் பல சிதைந்தன; அலுவலகம் மற்றும் குடியிருப்புக்கள் பழுதுற்றன; திருக்குளத்தைச் சூழ்ந்துநின்று அழகூட்டிய நூற்றுக்கணக்கான

தென்னைகள் விழ்ந்தன. ஐம்பதாயிரம்ரூபாய் மதிப்புக்குப் பெருஞ் சேதத்தை இப்புயல் விளைத்தது. இவ்வாறு புயல்வெள்ளத்தால் பாதிக்கப்பெற்றுள்ள நூற்றுக்கணக்கான திருக்கோயில்களையும், அறநிறுவனங்களையும் பாதுகாப்பது அரசு மற்றும் அவ்வப் பகுதியில் வாழும் மக்களின் கடமையாகும்.

மறக்கக்கூடாத உண்மை :

வேகமாக ஓடி விழ்ந்தவனுக்கு முதலில், மருந்திட்டு ஆறுதல் கூறி, தெளிவுறுத்துவோம்; பிறகு இப்படி ஓடுவது பிழை, இதனால்தான் விழ்ந்தாய் எனக் காரணம் காட்டுவோம். இது தானே உலகியல். நாமும் முதலில் நிவாரணப் பணியில் நம்மை அர்ப்பணித்துக் கொள்ளுவோம்; அமைதியாகச் சிந்திக்கும் நேரம் வரும்போது, இத்தகு துயரங்களுக்கு என்ன காரணம் என்று ஆராய்வோம். யாவும் இறைவன் அருளினால் நிகழ்வன; இன்பத்திற்கும் துன்பத்திற்கும் அவன் திருவடியே துணை என்பதனைமட்டும் மறவாது போற்றி உய்வோம்; உயர்வோம்; வாழ்வோம்.

"ஞானசம்பந்தம்"

37-வது புத்தாண்டுத் தொடக்கம்

குருவருளும், திருவருளும் துணைநிற்கத் தருமையாதீனத் திங்கள் இதழ் "ஞானசம்பந்தம்" முப்பத்தாறு ஆண்டுகள் மொழி - இலக்கியப்பணியோடு சைவ - சமயப் பணி இயற்றிய பெருமிதத்தில், முப்பத்தேழாவது புத்தாண்டில் அடி எடுத்து வைக்கிறது. இந்நாளில், இவ்விதழைத் தோற்றுவித்த 24-வது குருமகாசந்நிதானம் அவர்களையும், 25 ஆண்டுகளுக்கு மேலாக இவ்விதழைப் புரந்தருளிய 25 வது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களையும் பணிவுடன் நினைவு கூர்ந்து வணங்குகின்றோம்.

தமிழ் மொழி, மற்றும் சைவ - சமயப் பெருவளர்ச்சியில் "ஞானசம்பந்தம்" இயற்றிவரும் நிலையான பெரும் பணியைத் தமிழ் உலகம் நன்கு அறியும். சாத்திர - தோத்திரங்கள் ஞான சம்பந்தத்தால் புதிய வளம்பெற்றன. இலக்கிய இலக்கணங்கள் எழுச்சியுற்று ஓங்கின. மருத்துவம், தத்துவம், சோதிடம் முதலிய அருங்கலைகளையும் ஞானசம்பந்தம் அலங்கரிக்கத்தவறவில்லை.

தருமையாதீனம் 26 - வது குருமகாசந்நிதானம் அவர்கள் இவ்விதழைக் கண்போலப் புரந்து வருகிறார்கள். 'ஞானசம்பந் தத்தின் பணி என்றும் தொடர ஆயுள்சந்தா உறுப்பினர்களைச் சேர்க்க அருளாணை வழங்கி, திங்கள்தோறும் உயிர்க்குலத்தை

உய்விக்கும் அருள் ஞானக் கருத்துக்களை ஆசியுரையாக அருளிப் பரிபாலித்து வருகிறார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமணி அவர்களின் பெருங்கருணையைப் போற்றி நன்றியுடன் வணங்குதல் நம் அனைவரின் கடமையாகும்.

புதிய உற்சாகத்தோடு அரும்பெரும் கடமையாற்றப் புகும் ஞானசம்பந்தத்தின் பெருவளர்ச்சிக்குக் கட்டுரை கவிதை முதலியன எழுதி உதவும் அன்பர்களும் ஞானசம்பந்தம் பெறும் நல்லன்பர்களும் நலமெலாம் பெற்றுச் சிறக்க வாழ்த்துகிறது. பயன் கருதாது சமய - மொழி வளர்ச்சிக்குத் தொண்டாற்றும் ஞானசம்பந்தத்திற்குச் சந்தா செலுத்தியும், ஆயுள் உறுப்பினர்களாக இணைந்தும் ஏனையோரையும் இவ்வகையில் ஊக்கியும் ஆதரிக்க வேண்டுகின்றோம். குருவருளும் - திருவருளும் நல மெலாம் வழங்கும் என்ற உறுதியோடு 'ஞானசம்பந்தம்' புத்தாண்டில் தம் பணியைத் தொடங்குகின்றது.

அன்னை அருள்மாலை

திருமுறை இன்னிசைவாணர்,

வேலூர், திரு. க. சொக்கலிங்க ஓதுவார்

தெங்கோங்கு கீழைத் திருக்காட்டுப் பள்ளியுள்
செல்வி அகிலாண்ட அம்மை
திருக்குருகாவூர்வெள் ளடைகாவியங்கண்ணி
சீகாழி திலநாயகி
அங்கோலக்காவோசை கொடுத்தநாயகிவினை
அகலும்புள் ளிருக்குவேளூர்
அமர்தையல்நாயகிகண் ணார்கோயில்நிலவிடும்
அம்மைமுருகு வளர்கோதை
செங்கமலவாவிசூழ் கடைமுடியில்அபிராமி
திருநின்றியூ ருலகம்மை
சேவிக்கும்புள்கூரில் வளர்சொக்கநாயகி
திருநீடூர் வாழ்பரமனூர்
பங்கிலுறைவேயுறு தோளியம்மைநல்ல
பண்ணிலுறு பெண்ணமுதமே
பஞ்சின்மெல் லடியிணையைத் தஞ்சம் அடைந்தென்றும்
பணிவேற்கருள் அன்னையே. (2)

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வழங்கியருளிய

ஆசியுரை*

நம் தாய்மொழியாகிய தமிழ் மொழியைப் பல்வேறு அடைமொழிகள் சேர்த்துச் சிறப்பித்துக் கூறுவர் இவற்றுள் முத்தமிழ் என்பதும் ஒன்றாகும். முத்தமிழ் என்பதற்கு மூன்று வகைப் பாகுபாடுகளோடு கூடிய தமிழ் என்பது பொருள். தமிழ் மொழியில் சிற்பம் சித்திரம் முதலான கலைகள் பலவும் இருந்தாலும் அவை எம்மொழிக்கும் பொதுவாய் அமைவன. இயல் இசை நாடகம் ஆகிய மூன்றும் தமிழ்க் கலைகளின் தனித் தன்மையை விளக்கும் சிறப்புக் கலைகளாய் விளங்குவன. ஆதலின் இம்மூன்று துறைகளைக் குறிக்கும் அடைமொழியோடு தமிழ் வழங்கப்படுகிறது.

இயல் - எண்ணம்: அதாவது கருத்து: இதை மனம் அல்லது உள்ளம் எனலாம். எண்ணத்தின் விளைவாகத் தோன்றிய இலக்கிய இலக்கணங்களை இயல் குறிக்கிறது. பண்டைச் சான்றோர்களின் ஆழ்ந்த எண்ணமுயற்சியில் விளைந்த எட்டுத்தொகை, பத்துப்பாட்டு இவைபோன்ற நூல்தொகுதிகளை இயல் தமிழ் என இதுபற்றியே குறிப்பர். இசை என்பது சொல்; உள்ளத்தில் தோன்றிய கருத்துக்களைக் கேட்போர் கருத்துடன் ஓசை நயம்பட இசைவிப்பது. இது பற்றியே 'இசை' சொல் எனப்பட்டது. சொல்லுதல் என்பதனை இசைத்தல் என்று வழங்கு வதும் நமதுமரபு. கூத்து என்பது நமது உள்ளத்துள் தோன்றும்

---

*தருமையாதீனம் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் நவராத்திரி விழா நாட்களில் நடைபெற்ற தருமையாதீனக் கல்வி நிலையங்களின் கலைமகள் விழாவில் பங்குகொண்ட மாயூரம் தருமபுரம் ஸ்ரீ ஞானாம்பிகை மகளிர் கலைக்கல்லூரி மாணவியரின் வண்ணக் கலவை நிகழ்ச்சி, சென்னை செல்வி. சியாமளா அவர்களின் பரதநாட்டிய நிகழ்ச்சிகளுக்கு எழுந்தருளி 15—10—77 அன்று வழங்கியருளியது.

எண்ணங்களையும் மற்றும் உணர்ச்சிகளையும் உடல் உறுப்புக்களால் புலப்படுத்துவது. எனவே முத்தமிழ் மனிதனின் மனம், மொழி, மெய் ஆகிய முக்கரணங்களோடும் தொடர்புடையதாய் விளங்குவதை நாம் நன்கு உணரலாம். முத்தமிழிலும் மனத்தின் செயலாகிய இயலே முதலிடம் பெறுகிறது மனத்தோடு தொடர்புடைய வாக்கும், காயமும் அடுத்தடுத்து இடம் பெற்றுள்ளது. கருத்துக்குத்தான் முதலிடம் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

முத்தமிழில் மூன்றாவதாக விளங்கும் கூத்து, நாடகம் நாட்டியம் என இரு பிரிவினதாக வழங்கப்படும். அவற்றுள் நாட்டியம் பரதம் என்ற சொல்லாலும் குறிக்கப்படும். ப-பாவம் (பாவனை) ர - ராகம். த - தாளம். பாவம், ராகம் தாளம் ஆகிய மூன்றும் ஒன்று கூடியதே பரதம் இந்தப் பரதக்கலை நடராசப் பெருமானிடமிருந்து தோன்றியது.

சிவபெருமானது தாண்டவ வடிவம் தென்னாட்டில் சிறப்பாகப் போற்றப்பெறும் அருள் வடிவமாகும். ஆன்மாக்களின் பொருட்டுச் சிவபெருமான் நிகழ்த்தியருளிய இவ்வானந்தக் கூத்தே உலக இயக்கத்திற்குக் காரணமாக விளங்குவது. அத்தாண்டவம் நூற்றெட்டு வகைப்படும்.

தில்லையில் பதஞ்சலி வியாக்ரபாதரின் பொருட்டு, சிவபெருமான் ஆடியருளிய நடனம் நாதாந்த நடனம் அல்லது ஆனந்த தாண்டவம் எனப்படும். இறைவன் ஆடும் அத்திருநடனத்தை ஊனநடனம் ஞான நடனம் என இருவகையாகக் கூறுவர். பாசங்களோடு கூடிய பெத்தான்மாக்களை இறைவன் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் ஆகிய ஐந்தொழிற் படுத்தி ஆட்கொள்ளுதலைக் குறிக்கும்போது அத்திருநடனம் ஊன (ஊன் - உடல்) நடனம் எனப்படும். பாசத்தின் நீங்கிய முத்தான்மாக்களிடத்து இறைவன் செய்யும் அருட்செயல்களைக் குறிக்கும்போது அதுவே ஞானநடனம் (ஞானம் - அறிவு) எனப்படும்.

மாயை தனை உதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கியருள் தானெடுத்து — நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தான்எந்தை யார்வரதம் தான்

என்ற உண்மை விளக்கப் பாடல் இறைவனது 'ஞான நடனத்தைக் குறிக்க எழுந்த அருட்பாடலாகும். உடுக்கையை

உதறும் கை - மாயையை உதறும். தீயேந்திய கை - கன்மத்தைச் சுடும். முயலகனை மிதித்த திருவடி ஆணவ மலத்தை ஒடுக்கும். தூக்கிய திருவடி ஆணவ மலத்தில் அழுந்தியிளைத்த உயிரை எடுத்து நிறுத்தும். வரதகரம் அவ்வுயிரை அருள் வடிவாக்கிப் பேரின்பத்தில் மூழ்குவிக்கும் என்பது பாடலின் பொருளாகும்.

இத்தகைய தத்துவ உணர்வுகளோடு இறைவனது ஆனந்த தாண்டவத்தை வழிபடுவோர் கடவுள் வழிபாட்டி லேயே தத்துவ உணர்வையும் பக்தி யுணர்வையும் பெற்று இன்புறுவர்.

பரதநாட்டியம் தென்னாட்டின் பழமையான ஆடற்கலையாகும். பரதநாட்டியத்தில் நிகழ்த்தப்பெறும் முத்திரைகளும் முகபாவங் களும் இக்கலையின் தனிச்சிறப்புக்களாகும். நகை, அழுகை இளிவரல் (அருவருப்பு), மருட்கை (வியப்பு), அச்சம், வீரம், வெகுளி, சிருங்காரம், சாந்தம் ஆகிய நவரச பாவங்களை விளக்கி பாடல்களுக்கு அபிநயம் காட்டும் இப்பரதநாட்டியக்கலை தமிழகத்தின் தனிச்சிறப்புடைய நுண்கலையாக மதிக்கப் பெறுவது. ஆடவர்கள் ஆடலாசிரியர்களாய் விளங்க, பெரும் பாலும் பெண்களே இக்கலைக்குரியவர்களாய் விளங்கி வரு கின்றனர். இளமையும் அழகும் நல்ல உடலமைப்பும் உடை யவர்களே இக்கலையில் விளக்கமடைகின்றனர். பெண்கள் இக் கலையினைப் பயில்வதால் நல்ல உடற்பயிற்சியும் அழகும் தளின்மும் பெறுகின்றனர். இன்று நாட்டியமாடிய செல்வி சியாமளா சென்னை ஸ்டெல்லாமேரி கல்லூரி மாணவி. கல்லூரிப் பாடங்களைப் பயில்வதோடு இளமைதொட்டு ஓய்வு நேரத்தில் பரதம் பயின்று தேர்ந்துள்ளார். இவரது நடனம் நல்முறையில் அமைந்து விளங்குகிறது. மாயூரத்தில் அமைந்து விளங்கும் தருமபுரம் ஸ்ரீ ஞானாம்பிகை அரசினர் மகளிர் கலைக் கல்லூரி மாணவிகள் வண்ணக்கலவை என்ற பெயரில் பல்வேறு கலைநிகழ்ச்சிகளைச் சிறப்புற நிகழ்த்தினர்.

நமது தருமை ஆதீனத்தில் ஸ்ரீமகாலக்ஷ்மி துர்க்காதேவிக்கு நடைபெறும் நவராத்திரிப் பெருவிழாவில் இத்தகைய கலை நிகழ்ச்சிகளைச் சிறப்புற வழங்கிய பெருமைக்கு உரியவர்கள் ஸ்ரீ ஞானம்பிகைக் கலைக்கல்லூரி முதல்வர் செல்வி. சி. பார்வதி அவர்களும் அவர்களோடு உடன் பணியாற்றும் ஆசிரியைகளும் ஆவார்கள்.

அனைவர்க்கும் எல்லா நலன்களும் பெருக ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

"சத்தியங்கள் மலரட்டும்"

புலவர். திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ.

குருவருளும் திருவருளும் கரைக ளாகக்
குறைவில்லா ஞானமலர் கூட்டத் தோடே
வருகிறது பக்திவெள்ளம் வெள்ளம் ! வந்து
வண்ணமுடன் திளைத்தாடி நெஞ்சில் உள்ள
திருக்கெல்லாம் கரைந்தோடத் தெளிவு பெற்றுத்
திருவருளைப் பெற்றுய்வீர் ! வாரீர் என்று
தெருவெல்லாம் முழங்குகின்ற ஞானச்சங்கு
திருஞான சம்பந்தத் திங்கள் ஏடு !

ஆறுறு தத்துவமாம் படிகள் தாண்டி
ஆண்டவனின் திருவருளில் கலப்பார் போல
ஆறுறு ஆண்டுகளாய் உயிர்க்கூ ட்டத்தை
ஆதரித்து வளர்த்துவிட்ட பெருமி தத்தால்
சீராக நடையிட்டு முப்பத் தேழாம்
சிறப்பான புத்தாண்டில் ஞான ஏடு
வாரீர்என் பின்னாலே என்று கூறி
வண்ணஅடி வைக்கிறது ! வையம் வாழ !

செந்தமிழின் பெருநுட்பம் இலக்கி யத்தேன்
சீர்சான்ற சித்தாந்தப் பெருவி ளக்கம்
அந்தமிலா இறையருளை விளக்கும் எங்கள்
அருங்குணத்துக் குருமணியின் ஞானப் பூக்கள்
விந்தைமிகு கணிதங்கள் செய்திக் கூட்டம்
விதம்விதமாய் அறிஞர் உரை கவிதைக் கொத்து
செந்தமிழின் பேராற்றில் உள்ள தெல்லாம்
சேர் ஞான சம்பந்தம் உங்கள் சொத்து.

புத்தாண்டில் அன்பர்களை வாழ்த்தி என்றும்
புதுப்பொலிவில் வளர்கின்ற அன்பின் ஏடு
இத்தனைநாள் போல்என்றும் அன்பர் எல்லாம்
இதைப்போற்றி வரவேற்க வேண்டி நின்று
வித்தான நல்லறிவின் வளர்ச்சிக் காக
வீரநடை போட்டு இங்கே எழுதல் காண்பீர் !
சத்தியங்கள் மலரட்டும் நாட்டில் எங்கும்
சங்கரனார் திருவருளே சதிரா டட்டும்.

உ
சிவமயம்

ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பதும், 'ஆலயம் தொழுவது சாலவும்நன்று' என்பதும் நம்நாட்டில் வழங்கும்பழமொழிகள். மக்களைத்திருக்கோயில் வழிபாட்டில் ஈடுபடுத்தி, சைவ - சமயப் பெருமைகளை அறியச்செய்து உய்விக்கவேண்டும் என்ற பெருங்கருணையால் தருமையாதீனம் 26-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தமது குருமூர்த்திகள் காட்டியருளிய வழியிலேயே தமது ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளிலும் பாடல்பெற்ற தலங்கள்தோறும் முறையான வழிபாட்டிற்கு வழிகாட்டி வருகிறார்கள். மாதந்தோறும் காவிரி வடகரைத் தலங்களில் வழிபாடு நடைபெறுகின்றன. உழவாரப்பணி, விசேட அபிடேக ஆராதனைகள், தலத் திருப்பதிகங்களை அச்சிட்டு ஓதிவழங்குதல், சமயப்பிரசாரம் முதலியன ஆயில்யத்திருநாள் வழிபாட்டின் அங்கங்களாகும்.

நிகழும் பிங்கள ஆண்டு மார்கழித்திங்கள் 14 – ஆம் நாள் (29—12—77) வியாழக்கிழமையன்று மாத ஜன்மநட்சத்திர மாதலின் திருப்பைஞ்ஞீலியிலும் திருப்பாச்சிலாச்சிராமத்திலும் வழிபாடு சிறப்புற நடைபெறும்.

(1) திருப்பாச்சிலாச்சிராமம் ஸ்ரீபாலசுந்தரி உடனுகிய ஸ்ரீ மாற்றறிவரதர் திருக்கோயிலில் காலை 11 மணி முதல் அபிஷேக ஆராதனைகளும் வழிபாடும் நடைபெறும்.

(2) திருப்பைஞ்ஞீலி ஸ்ரீ விசாலாக்ஷி உடனுகிய ஸ்ரீ நீலகண்டர் திருக்கோயிலில் மாலையில் அபிஷேக ஆராதனைகளும் வழிபாடும் நடைபெறும்.

திருப்பைஞ்ஞீலி வழிபாட்டின்போது மாலை 6 மணிக்கு

தருமை ஆதீனப் புலவர்

வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., அவர்கள்

விரிவுரை நிகழ்த்துவார்கள்.

அனைவரும் வருக! வழிபட்டு உய்க! அரன் அருள் பெறுக!

சைவ சமயச் சிறப்பு*

“சைவ சமயமே சமயம்” “சைவத்தின் மேற்சமயம் வேறில்லை” என்பன ஆன்றோர் வாக்குகள். “வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமை தப்பித் தாழ்வெனும் தன்மையோடும் சைவமாம் சமயம் சாரும் ஊழ்பெறல் அரிது” என்று கூறுகின்றது சிவஞானசித்தியார். சைவர்களாய்ப் பிறந்துள்ள நாம் உண்மையில் புண்ணியப்பேறு உடையவர்களாவோம். புறம்புறம், புறம், அகப்புறம், அகம் ஆகிய சமயங்களில் பிறந்து அச்சமயநெறி நின்று படிமுறையால் பல பிறவிகளைப் பெற்று, மேம்பட்ட இச் சைவ நெறியைச் சார்ந்துள்ள நாம் உயர்ந்த பிறப்பைப் பெற்றுள்ளோம் என்பதில் ஐயம் என்ன?

சைவம் என்பது யாது? சைவத்தின் ஆசிரியர்கள் யாவர்? அவர்கள் நமது சமயத்தை எவ்வாறு நமக்குப் பாதுகாத்துத் தந்தார்கள்? நமக்கு அவர்கள் அருளிச்சென்ற உபதேசங்கள் யாவை? என்பனவற்றை நாம் அறிந்துக்கொள்ளாமலும் அறிந்து அந்தவழியில் நில்லாமலும் இருப்போமாயின் பிறப்பிலே நாம் சைவர்களாய்ப் பிறந்தும் பயன் என்ன? கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாது போவது போலவும், வெள்ளத்துள் நாவற்றி இருப்பது போலவும், செல்வத்தைப் பெற்றிருந்தும் அதனை அனுபவிக்கத்தெரியாதது போலவும் அன்றோ ஆகிவிடும்! இதனை நாம் சிறிதளவேனும் சிந்திக்கவேண்டாமோ?

சைவத்தின் சிறப்பு - தொன்மை :-

உலகில் பல சமயங்கள் உள்ளன. எனினும், அவை எல்லாம் ஒவ்வொரு காலத்தில் தோன்றிய காலவரையறையை உடையன. நமது சைவ சமயம், தோற்றம் அறியப்படாத பழமை உடையது. பிற பிற சமயங்கள் ஒவ்வொருகால எல்லையையுடைய ஒவ்வொரு ஆசிரியரால் தோற்றுவிக்கப்பட்டமையால் அவற்றின் கால எல்லைகள் அறியப்படுகின்றன. சைவ சமயம் காலத்தைக்கடந்த இறைவனாலே அளிக்கப்பட்டமையால் இது கால எல்லை அறியப் படாததாகின்றது.

---

* சென்னை, சைவ சித்தாந்த மகாசமாஜத்தினர் நிகழ்த்திய தமிழக சைவ சமய நிறுவனங்களின் பிரதிநிதிகள் மகாநாடு மாயூரத்தில் 6—11—1977 இல் நடைபெற்றபோது சீகாழி திரு. S. விசுவநாத முதலியார் அவர்கள் ஆற்றிய வரவேற்புரை.

பொதுநோக்கு :-

இந்தியநாட்டில் 'ஆறு சமயங்கள்' (ஷண்மதம்) எனப்பட்ட அகச்சமயங்கள் யாவும் முற்காலத்தில் சைவசமயத்தின் ஒவ்வொரு பகுதியாகவே இருந்தன. பிற்காலத்தில் சிலரால் அவை வேறு வேறு தனி மதங்களாக்கப்பட்டன. அதனால் சைவர்கட்கு எக் காலத்திலும் அச்சமயங்கள்பால் வேற்றுமை உணர்வு இல்லை. பொதுநோக்கே உள்ளது. இதற்குச் சிவாலயங்களில் உள்ள மூர்த்திகளே போதிய சான்று.

"விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயம்செய்தே
எரிவினால் சொன்னாரேனும் எம்பிராற் கேற்றதாகும்"

என்னும் அப்பரடிகளின் வாக்கு ஒன்றே சமயத்தின் பொது நோக்கினை இனிது விளக்கி நிற்கும். உலகிலுள்ள மக்களின் தரம் பல்வேறாய் இருத்தலால், அவற்றிற்கு ஏற்பப் பல்வேறு சமயங்களும் வேண்டப்படுவனவே என்பதுதான் சைவ சமயத்தின் உட்கருத்து.

உலகியலுக்கு ஒத்தல் :-

சிற்சில மதங்கள், உலகத்தைத்தமக்குப் பகைப்பொருளாகக் கருதி உலகியலை அடியோடு வெறுத்து ஒதுக்குவனவாய் உள்ளன. சைவ சமயம் அவ்வாறின்றி உலகம் உயிர்களது நன்மையின் பொருட்டு இறைவனால் தரப்பட்டது; அதனால் உலகியல் முறை உயிர்களின் பக்குவ முதிர்ச்சிக்கு அமைந்த ஒரு சாதனம் என்னும் கருத்துடையது. அதனால் சைவ சமய நடை முறைகள் யாவும் உலகியலுக்கு ஒத்த வகையிலே அமைந்திருத்தல் காணலாம். சைவ சமய ஆசாரங்கள் உடல் நலத்திற்கு ஏற்ற வகையிலே அமைந்திருத்தல், சைவத்தின் தத்துவக் கொள்கைகள் இன்றைய அறிவியல் அறிஞர்களாலும் ஏற்கத் தக்கனவாயிருத்தல் முதலியனவற்றையும் நாம் இங்கு நினைவு கூர்தல் தக்கது.

பரந்த நோக்கம் :-

உலகியல் வகையில் எவ்வாறாயினும் சைவ சமயம் சமயத் துறையில் மக்களிடையே சாதி, குலம், பிறப்பு முதலிய வேறு பாடுகளைக் கொள்வதில்லை. இதற்குச் சைவ சமய அடியார்களாகிய அறுபான்மும்மை நாயன்மார்களே சிறந்த எடுத்துக் காட்டாவார்கள். அறுபான்மும்மை நாயன்மார்களில் அந்தணர்

உண்டு பேரரசர் உண்டு. சிற்றரசர் உண்டு. வணிகர், வேளாளர், தொழிலாளர், மீனவர், தாழ்த்தப்பட்டோர் முதலிய பலரும் உள்ளனர். இன்னும் இல்லறத்தாரும் துறவிகளும் உள்ளனர். உலகியலில் இங்ஙனம் பல்வேறு வகையினராகக் காணப்படும் இவர்கள் அனைவரும் சமய நெறியில் ஒரு தன்மைய ராகவே காட்சியளிக்கின்றார்கள். இவர்கள் யாவரும் பெற்ற பேறு ஒன்றே என்பதும் சைவ சமயத்தின் கொள்கை.

> " எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்
> மன்னிய சீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருள் ..."

என்பது சைவ சமயத்தின் அருள்மொழி. சிறந்த தத்துவக் கொள்கை சிறந்த ஒழுக்கம் என்பவைகளை உடையதாய் அதே சமயத்தில் இவ்வளவு பரந்த நோக்கத்தைக் கொண்டதாய் உள்ள ஒரு மதம் - சமயம் கிடைத்தல் அரிது. இதனைப் புண்ணிய வசத்தினாலே பெற்றுள்ள நாம், இந்த அரிய வாய்ப்பினை நன்கு பயன்படுத்திக்கொள்ளத் தவறுதல் கூடாது.

நம் ஆசிரியர்கள் :-

கால எல்லை அறியப்படாத பழமை உடையதாய், அதே சமயத்தில் பலவகைச் சிறப்புக்களையும் பெற்றுள்ளதாகிய நம் சைவ சமயத்திற்கு முதல் ஆசிரியர் சிவபெருமானே. அவன் 'வேதம், சிவாகமம்,' என்னும் இருவகை நூல்களாலும் இச் சமயத்தைத் தொன்மைக் காலத்தில் பொதுவாகவும், சிறப்பாக வும் உலகிற்கு உணர்த்தியருளினான். ஆயினும் அதனை உணர மாட்டாத மக்களால் இடைக் காலத்திலே பல குழப்பங்கள் தோன்றலாயின. அக்காலத்தில் இறைவனது திருவருட் குறிப் பின்படி தமிழ் நாட்டிலே தோன்றி விளக்கம் கண்டவர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய சமயாசாரியர் நால்வரும், மெய்கண்டார், அருணந்தி தேவர், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவாசாரியர் என்னும் சந்தானாசாரியர் நால்வரும் ஆவர். அவர்களில் சமயாசாரியர் கள் தோன்றியகாலம், வேற்றுச் சமய மன்னர்களது ஆட்சியின் செல்வாக்கினால் சைவசமய ஒழுக்கமே புறக்கணிக்கப்பட்டுச் சமய ஒளி குன்றியிருந்தது. அப்பொழுது திருவவதாரஞ்செய்து நடைப்பயணத்திற்கும், செம்மையான வழியில்லாமல் காடு, செடி, மலை, கல், முள், பள்ளம், மேடு, ஆறு, மடு, ஓடைகள் முதலிய இடையூறுகள் நிறைந்த அக்காலத்தில் ஆயிரக்கணக்கான அடியார் திருக்கூட்டத்துடன் வெயில், பனி, மழை, பசி, தாகம் பஞ்சம் முதலியவற்றுள் எதனையும் பொருட்படுத்தாமல் தமிழ் நாடு முழுவதும் - சிறு மூலை முடுக்குகளிலுங்கூட யாத்திரை

செய்து அரிய, இனிய இசைப்பாடல்களாலும் பல அற்புதச் செயல்களாலும் சைவ சமய உண்மையை விளங்கச்செய்தனர். புறச் சமயத்தைக் கைக்கொண்டிருந்த மன்னர்களும் உண்மையை உணர்ந்து தாங்களாகவே சைவர்களாகும் சிறப்பினை உண்டாக்கிச் சைவ சமயத்தை நிலை பெறச் செய்தவர்கள், சமயசாரியர் நால்வரில் முதல் இருவராகிய ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும் ஆவர். அவர்களுள் நாவுக்கரசர் தமிழ்நாட்டின் வட பகுதியில் மகேந்திர வர்ம பல்லவனைச் சைவனாக்கியும் ஞானசம்பந்தர் தமிழ் நாட்டின் தென்பகுதியில் பாண்டியனைச் சைவனாக்கியும் சைவ சமயத்தை நிலை நிறுத்தினார்கள்.

இவ்விரு நாயன்மார்கட்கும் ஏறக்குறைய ஒரு நூற்றாண்டிற்குப் பின் சுந்தரர், திருநாவலூரில் திரு அவதாரம்செய்து, திருவாரூரில் எழுந்தருளியிருந்து, முன்னை ஆசிரியர் இருவரும் செய்தருளிய வாறே தாமும் தமிழ்நாடு முழுவதும் யாத்திரை செய்து, இசைத்தமிழ்ப் பாடல்களையும் ஆங்காங்கு அருளிச்செய்தார் சேர நாட்டு அரசராகிய சேரமான் பெருமான் இவருக்கு உற்ற தோழராகியதும், அவரது விருப்பப்படியே சேர நாட்டிற்கு இவர் எழுந்தருளி அங்கு யாத்திரை செய்து திருப்பாடல்கள்பாடியதும் இவர்பால் சிறப்பாகக் காணப்படுவன. முன்னை இருவரும் தமிழ் நாட்டில் வடக்கிலும், தெற்கிலும் மட்டுமே யாத்திரைசெய்தார்கள். இவர் மேற்கிலும் யாத்திரை செய்தார்.

மற்றும் சிறப்பிற் சிறப்பாக இவர் செய்தருளியது, திருத்தொண்டத் தொகைத் திருப்பதிகத்தாலும் பிறவற்றாலும், சைவ நெறியில் நின்று சிறப்புற்ற அடியார்களின் பெருமை, ஞானசம்பந்தர், நாவுக்கரசர் என்னும் ஆசாரியர்களின் பெருமை இவைகளை விளக்கும் முகத்தால் அடியார்க்கு அடியராவதே ஆண்டவனுக்கு அடியராவதாகும் என்னும் பேருண்மையை விளக்கியதாம். ஒருசமயம் சிறப்புற்று விளங்குவது அதில் நின்று பயன்பெற்ற அடியார்களாலேயாம். அதனால் நாயன்மார்களது பெருமை மக்களுக்கு இனிது விளங்கினமையால் சைவ சமயம் தழைத்தோங்குவதாயிற்று. எனவே சம்பந்தரும், அப்பரும் புறச்சமயமாகிய நிலத்தைத்திருத்தி உழுது பண்படுத்திச் சிறந்த சிவவித்துக்களை இட்டுச் சென்றார்கள் என்றும், சுந்தரர் அந் நிலத்தில் நல்ல உரங்களை இட்டு நீர் பாய்ச்சிப் பயிரைச் செழிப்புற வளர்த்ததோடு மற்றும் கனிவகை முதலியவைகளையும் தருமாறு செழிக்கச் செய்தார் என்றும் கூறலாம்.

மூவரது திருப்பாடல்கள் இசைத் தமிழாய் நின்று பக்திச் சுவையோடு கலையுணர்வையும் வளர்த்தன. அவை பக்திச்சுவை

ஒன்றையே பெருக்கிக் கருங்கல் மனமும் கரைந்து உருகுமாறு செய்யும் திருவாசகத்தோடு இணைந்த பொழுது, சைவ சமயம் ஈடும் எடுப்பும் இல்லாத பெருமையையுடையதாய் இன்னும் நின்று நிலவுவதாயிற்று. இவ்வாற்றால் நால்வர் பெருமக்கள் இல்லையென்றால் நம் சைவ சமயம் எங்கே இருக்கும்? இன்று நாம் பெருமை பேசிக் கொள்வதற்குக் காரணமாய் உள்ள திருக்கோயில்கள் எங்கே இருக்கும்? இந்த அருமையை உணர்ந்த ஒரு பெரியார் உணர்ச்சி மேலிட்டால் பாடிய வெண்பா நம் அனைவராலும் பலகால் படித்து உணரத் தக்கது.

" சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் எம் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் — முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே? மாமறைநூல் தானெங்கே?
எந்தைபிரான் அஞ்செழுத் தெங்கே "

இவ்வாற்றால் சமயாசாரியர் நால்வர்களது வரலாற்றைச் சுருக்கமாகவேனும் சைவர் ஒவ்வொருவரும் அறிந்திருத்தலும் அவர்களை வழிபடுதலும் அவர்தம் அருள்மொழிகளை அன்புடன் ஓதி உணர்தலும் இன்றியமையாதன.

" பொன்னுற் பிரயோசனம் பொன்படைத்தாற்குண்டு
பொன் படைத்தோன் தன்னுற் பிரயோசனம் பொன்னுக்கு
அங்கு ஏதுண்டு?"

என்பது போல, ஆசிரியர்களை வழிபடுவதால் வழிபடுபவர்கட்குப் பயனேயன்றி அவர்கட்கு வருவது ஒன்றில்லை. (தொடரும்)

அட்டைப்பட விளக்கம்

மார்கழித்திங்கள் தேவர்களுக்கு விடியற்காலம். இத்திங்களில் அனைவரும் வைகறையில் எழுந்து, சிதப்புனலாடி, சிற்றம்பலம் பாடி மாணிக்கவாசகர் அருளிய திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி ஆகிய நூல்களை ஓதி மலரிட்டு இறைவழிபாடு செய்து இன்புறுவார்களாக. மார்கழியில் தில்லைப்பெருமான் திருக்காட்சி வழங்கும், சைவர்களின் மிகச் சிறந்த திருவாதிரைத் திருநாள் 26—12—77 அன்று வருகிறது. தில்லைக் கூத்தன் திருவடிகளில் மலரிட்டு வணங்குவதோடு தாமருளிய திருவாசகம், திருக்கோவையார் என்னும் திருவளர் தாமரைகளை மணிவாசகப் பெருமான் சாத்தும் அரியகாட்சியை அட்டைப்படத்தில் பார்க்கிறோம். திருவாதிரை நாளில் நாமும் ஆனந்தக்கூத்தன் அடிமலர் பரவி உய்வோமாக.

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்



இன்றெமது நல்லிதழைப் புரந்துவரும் எம்முதல்வர்
மன்றுபுகழ்ச் சண்முகதே சிகருவின் திருத்தோற்றம்.

திருப்பாற்றுறை - திருஆனைக்கா தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப் புலவர்,

வித்துவான். திரு. வி. சா. குருசாமிதேசிகர் எம் ஏ.,

திருப்பாற்றுறை

சோழ வளநாட்டில் காவிரியின் வடகரைத் தலங்களில் 59 வது தலமாக விளங்கும் இத்தலம் திருவானைக்காவிற்குக் கிழக்கே 8 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. திருவானைக்காவிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள திருவளர்சோலை வரை பேருந்துவசதி உள்ளது. அங்கிருந்து நடந்துசெல்லலாம். மட்சாலை உள்ளது.

கோயிலமைப்பு :

கொள்ளிடத்தின் தென்கரையில் கிழக்குநோக்கிக் கோயில் அமைந்துள்ளது. நாட்டுக்கோட்டை நகரத்தாரால் திருப்பணி செய்யப்பெற்றுக் கோயில் நன்கு பரிபாலிக்கப் பெறுகிறது.

நந்தி பலிபீடங்கள் வெளியில் உள்ளன. மூன்று நிலைக் கோபுரம் கோயிலுக்கு அணிசெய்கிறது. கோபுரவாயிலில் காவல் தெய்வம் கருப்புசாமி, விநாயகர், முருகன் ஆகிய மூர்த்திகள் உள்ளனர்.

கோபுர வாயிலைக் கடந்தவுடன் முன்மண்டபம் தொடர்ந்து பிராகாரம். மேற்குப் பிராகாரத்தில் விநாயகர் முருகன் லக்ஷ்மி கோயில்களும், வடக்குப் பிராகாரத்தில் சண்டேசர் கோயிலும் கிழக்கே பைரவர் நவக்கிரக மண்டபங்களும் உள்ளன. கர்ப்பக் கிருகக் கோஷ்டங்களில் தெற்கே வீணாதக்ஷிணாமூர்த்தி, விநாயகர், தக்ஷிணாமூர்த்தி மேற்கே அர்த்தநாரீசுவரர் வடக்கே பிர்மா, துர்க்கை திருவுருவங்களும் உள்ளன.

உள்ளே நுழைந்ததும் மகாமண்டபம். அம்பாள் சந்நிதி தெற்குநோக்கியுள்ளது. மண்டபத்தைக் கடந்து அர்த்த மண்டபத்திற்குள் சென்றதும் வடபால் சமயாசாரியர் நால்வரும் கைலாசநாதரும் எழுந்தருளியுள்ளனர். தென்பால் வேணு கோபாலர் சோழமன்னர் உருவங்கள் உள்ளன. சந்நிதியில் சிறிய விநாயகரும் துவாரபாலகரும் உள்ளனர். இடை நாழிகை மண்டபம் சோழர்காலப் பாணியில் பெரியநான்கு தூண்களோடு திகழ்கிறது.

திருமூலநாதர் சந்நிதி நம் மனத்தைப் பெரிதும் கவர்கிறது. சுவாமி சுயம்புமூர்த்தி; சிறிய திருவுருவம். மூலநாதேசுவரர் என வும் வழங்கப்பெறுகிறார். திருஞான சம்பந்தரும் இத்திருப் பெயரைக் குறித்துப் பாடியுள்ளார்.

" காரார் கொன்றை கலந்த முடியினர்
சீரார் சிந்தை செலச் செய்தார்
பாரார் நாளும் பரவிய பாற்றுறை
ஆரார் ஆதி முதல்வரே."

என்பது ஞானசம்பந்தர் அருளிய தேவாரம். ஓதி வழிபட்டு வெளியில் வந்ததும் அம்பாள்சந்நிதியை அடைகிறோம். அம்பாள் பெயர் மோகநாயகி. மேகலாம்பிகை எனவும் வழங்கப் பெறுகின் றாள். அம்பாள் சந்நிதி விசேஷமாகப் போற்றப்படுகிறது. தலமரம் - வில்வம். தீர்த்தம் கொள்ளிடம் - திருக்குளம்.

தலப்பெருமை

மார்கண்டேயர் பூசைக்குப் பால் இல்லாமையால் வருந்திய போது சிவபிரான் அருளால் பால் பெருகிய தலம் ஆதலால் பாற்றுறை எனப் பெயர்பெற்றது எனக் கூறுகின்றனர்.

மார்க்கண்டேயர் வரலாறு :

முற்காலத்தில் கடகம் என்ற நகரத்தில் மிருகண்டு என்ற பெயருடைய முனிவர் ஒருவர் இருந்தார். அவர் மனைவி பெயர் மருத்துவதி. மகப்பேற்றை விரும்பித்தவம் செய்தார் முனிவர். இறைவன் தோன்றி நற்குணமுள்ள பதினாறு வயதுள்ள பிள்ளை வேண்டுமா? தீய குணங்கள் நிரம்பிய நூறாண்டு வயதுள்ள பிள்ளை வேண்டுமா? என்று கேட்டார். முனிவர் நற்குணமுள்ள பிள்ளையே வேண்டுமென்றார். இறையருளால் மார்க்கண்டேயர் தோன்றினார். அவர், தமக்கு இறைவனளித்த ஆயுட் காலம்

பதினாறே என்பதை அறிந்து பல தலங்களுக்கும் சென்று இறைவனை வழிபட்டார். திருப்பாற்றுறையில் ஆதிமூலேசுவரரையும் மோக நாயகியையும் வழிபட்டார். திருக்கடவூரில் வழிபாடாற்றும்போது வயது பதினாறு நிரம்பியது. காலதேவன் வந்தான். இறைவன் காலனைக் காலால் உதைத்து என்றும் பதினாறாக வாழும் சிரஞ்சீவித் தன்மையை மார்க்கண்டேயருக்கருளி மறைந்தார்.

சோழ மன்னன் ஒருவன் இத்தல வழியில் வரும்போது காடாக இருந்த இவ்வூர்ப் புதர் ஒன்றிலிருந்து வெண்மையான பறவை ஒன்று பறந்து சென்றதைப் பார்த்தான். அப்பறவை வெளிப்பட்ட இடத்தில் அவன் மனம் ஈடுபட்டது. அருகிற் சென்றான். நறுமணம் வீசியது. காவலர்களை விட்டு அவ்விடத்தை அகழச்செய்தான். புதையுண்டிருந்த சுவாமியின் தலையில் மண் வெட்டிபட்டது. வெட்டுப்பட்ட இடத்தில் பால் பெருகியது. கண்ட மன்னவன் மனம் பதைத்தான். சிவலிங்கத்தை எடுத்துத் திருக்கோயில் கட்டி வழிபாடுகள் செய்தான். இச்சோழமன்னன் உருவம் சுவாமி சந்நிதியில் உள்ளது.

அண்மைக் காலத்தில் ஸ்ரீ சண்முக சுவாமிகள் என்ற சித்தர் ஒருவர் இத்தலத்தில் தங்கி இறைவனருளால் நோய்கள் பலவற்றையும் குணப்படுத்தித் திருக்கோயிலைச் சிறந்தமுறையில் பரிபாலித்துள்ளார்.

கல்வெட்டுக்கள் :

இத்தலத்தைப்பற்றி அரசியலாரால் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் பதினாறு உள்ளன. அவை முதற்பராந்தகன் பரகேசரிவர்மனான விக்கிரமசோழன்; இராஜராஜன், இராஜேந்திரசோழதேவன் காலத்தன. அவற்றில் இத்தலம்கொள்ளிடத்து தென்கரை நாட்டுப் பிரமதேயமான உத்தமசீலி சதுர்வேதிமங்கலத்துத் திருப்பால்துறை என விக்கிரமசோழன் காலத்துக் கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது. இறைவன் திருப்பால்துறை மகாதேவர் என்றும் திருப்பால்துறைநாயனார்என்றும், திருப்பால்துறை உடையார் என்றும்வழங்கப்படுகிறார். கல்வெட்டுக் குறிப்பாளர் ஆதி மூலேஸ்வரர் என்று]அழைக்கிறார். தலம் திருப்பாலத்துறை என இக்காலத்து வழங்குகிறது. கோயிலுக்கு அண்மையில் திருநாவுக்கரசர் திருமடமும் ஆண்டார் எம்பிரானார் மடம் எனப்பெயரிய சிங்கிய சந்தானத்து மடமும், திருவானைக்கா திருஞானசம்பந்தர் மடமும், நாற்பத்தெண்ணாயிரவர் திருமடமும் இருந்தனவாகக் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கு அரசர்கள் நிலம் வழங்கிய செய்தியும் குறிக்கப்படுகின்றன.

ஏனைய கல்வெட்டுக்கள் திருக்கோயிலுக்கு விளக்கிற்காக நிலமும், பசுவும், ஆடும் விட்டசெய்திலை அறிவிப்பன. இவையன்றி, கோயிலுக்கு வடபக்கத்தில் காக்கும் நாயகன் மடம் என்றொன்று இருந்ததாகவும் அதற்கு மும்முடிச் சோழமங்கலத்துச் சபையார் நிலமளித்ததாகவும்தெரிகிறது திருப்பனம்பூதூர் பரமேஸ்வரருக்கு அரிகுலகேசரி தேவரால் உத்தமசீலி சதுர் வேதிமங்கலத்து நிலம் விட்ட செய்தியும் அறியப்படுகிறது.

திருவானைக்கா

இத்தலம் சோழவளநாட்டில் காவிரியின் வடகரைத் தலங்களில் 60 வது தலமாகும். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருச்சிராப்பள்ளிக்கும் ஸ்ரீரங்கத்திற்கும் இடையில் விளங்குவது. ஸ்ரீரங்கம் ரயில் நிலயத்திற்குக் கிழக்கே 1 கி. மீட்டர் தூரத்திலுள்ளது. திருச்சிராப்பள்ளியிலிருந்து இத்தலத்திற்குச் செல்ல நகரப் பேருந்து வசதிகள் மிகுதியும் உள்ளன.

புனிதமான யாத்திரைத் தலங்களில் ஒன்றாய் பல்லாயிரவர் நாடோறும் வந்து வழிபடும் இத்தலம் மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றாலும் சிறந்து பஞ்ச பூதத்தலங்களில் அப்புத்தலமாக விளங்குவது. ஆதாரத் தலங்களில் சுவாதிட்டானத் தலம் எனப் போற்றப்பெறுவது. யானை பூசித்துப் பேறு எய்தியதால் ஆனைக்கா எனவும், வெண்ணாவல் மரத்தின் கீழ் இறைவன் வீற்றிருத்தலால் வடமொழியில் ஜம்புகேசுவரம் எனவும் வழங்கப் பெறும். அம்பிகை நீரால் அமைத்துவழிபட்ட சிவலிங்கமூர்த்தியைக் கொண்ட இத்தலம் ஐந்து பிராகாரங்களைக்கொண்ட பெரிய தலம் என்பது குறிப்பிடத்தக்கது.

இறைவன் திருப்பெயர் ஸ்ரீஜம்புகேசுவரர், ஜம்புநாதர் வெண்ணாவலீசர், அப்புலிங்கம் எனவும் வழங்கப்பெறுவர். அம்பிகை திருப்பெயர் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி. அப்புலிங்கம் என்னும் இறைவரின் திருப்பெயரை அப்பரடிகள் 'செழுநீர்த்திரளைச் சென்றாடினேனே' என எடுத்தாண்டுள்ளார். அப்புத்தலம் என்பதற்கேற்ப சுவாமியின் கருவறையில் தண்ணீர் ஊறிக் கொண்டே இருக்கும். சுவாமி சந்நிதியில் ஒன்பது வாயில் சாளரம் உள்ளது. அதன் வழியே சுவாமியைத் தரிசித்தால் ஒன்பது தீர்த்தங்களிலும் நீராடிய பலன் கிடைக்கும்.

தலமரம் வெண்ணாவல். இது கருப்பக் கிருகத்திற்கு அருகில் விளங்குவதைக் காணலாம்.

தீர்த்தங்கள் :

காவிரி, பிரமதீர்த்தம், இந்திர தீர்த்தம் சந்திரதீர்த்தம் முதலிய ஒன்பது தீர்த்தங்கள் உள்ளன.

வழிபட்டோர் :

பிரமன், திருமால், திக்குப் பாலகர், அஷ்ட வசுக்கள் சம்பு முனி, அம்பிகை, சிலந்தி, யானை, இராமர், பராசரன் கோச்செங்கணான், உறையூர்ச் சோழன், முதலியோராவர்.

சிலந்தியும் யானையும் வழிபட்ட சிறப்பு :

சிலந்தியும் யானையும் வழிபட்டு உய்திபெற்ற சிறப்பு இத்தல வரலாற்றில் குறிப்பிடத்தக்க பெருமையுடையதாகும். பெரிய புராணத்தில் கோச்செங்கட் சோழநாயனார் புராணத்தில் இவ் வரலாறு கூறப்படுகிறது.

திருவானைக்காவில் வெண்ணாவல் மரத்தின்கீழிருந்த சிவ லிங்கத்தை வெள்ளானை ஒன்று நீராட்டி மலர் சூட்டி வழிபாடு செய்துவந்தது அம்மரத்திலிருந்த சிலந்தி ஒன்றும் நாவல் இலை சிவலிங்கத்தின்மேல் உதிராவண்ணம் வாய்நூலால் வலைகட்டிப் பக்தி செய்து வழிபட்டது. யானை அச்சிலந்தி வலையை எச்சில் என்று அழித்து வந்தது. சிலந்தி, தான் செய்த இறை பணிக்கு ஊறு விளைத்த யானையின்மேல் கோபம்கொண்டு அதைக்கொல்ல எண்ணி யானையின் துதிக்கையுள் புகுந்து கடித்தது. யானை வலிபொறுக்கமுடியாமல் நிலத்தில் மோதிக்கொண்டு உயிர் துறந்தது. மோதிய வேகத்தில் சிலந்தியும் இறந்தது. மெய் யுணர்வோடு தன்னை வழிபட்ட யானைக்கு இறைவன் சிவலோகம் அருளினான். சிலந்திக்குச் சோழமன்னர் குலத்தில் கோச்செங்கட் சோழனாகப் பிறக்கும் வரத்தை அருளினார்.

கோயிலமைப்பு :

ஆனைக்கா அண்ணலின் திருக்கோயில் பேருந்துச்சாலைக்குக் கிழக்கே விளங்குகிறது. சுவாமி மேற்குநோக்கியும் அம்பிகை கிழக்கு நோக்கியும் உள்ளனர். ஐந்து பிராகாரங்களையும் ஏழு கோபுரங்களையும் உயர்ந்த மதில்களையும் கொண்டுள்ளது இக் கோயில். 80 ஆண்டுகளுக்கு முன் நாட்டுக்கோட்டை தனவணிகர் திரு. சிதம்பரம் செட்டியார் இவ்வாலயத்தின் மூலத்தானம் உட் பிராகாரம் முதலியவற்றை நன்முறையில் கருங்கல் திருப்பணி யாகக் கவினுறச் செய்துவைத்தார்.

ஏழுநிலை இராஜகோபுரத்தை அடுத்து ஐந்தாவது பிராகாரம் விளங்குகிறது. அதை யடுத்து ஆயிரக்கால் மண்டபமும் திருக்குளமும் உள்ளன. இரண்டாம் கட்டடக் கோபுர வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் ஏழுநிலைக் கோபுரம் விளங்கித் தோன்றுகிறது. விநாயகர், முருகன் சந்நிதிகளை வழிபட்டு உள்ளே செல்கிறோம். மிகப்பெரிய ஊஞ்சல் மண்டபம் திகழ்கிறது. இது மூன்றாம் பிராகாரம். அம்பாள் கோயில், இப்பிராகாரத்தின் வடபாலில்தான் உள்ளது. அடுத்துள்ள கோபுரத்தைக் கடந்து இரண்டாம் பிராகாரத்தை அடைந்து வலம்வந்து உள்ளே சென்றால் முதற்பிராகாரம். இதில் உற்சவ மூர்த்திகள் அறுபத்துமூவர்திருவுருவங்கள் அனைத்தும்உள்ளன. வெண்ணாவல் மரத்தினடியில் விளங்கும் ஸ்ரீ ஜம்புகேசுவரர் விமானம் தங்கவிமானம். இந்தப் பிராகாரத்தை வலமாக வந்து சந்நிதியை அடைகிறோம். பெருமாள் சந்நிதியில் நவத்துவாரங்களுடன் சாளரம் உள்ளது. அதன் வழியாகவழிபட்டும் உள்ளே சென்று வழிபட்டும் வெளியில் வருகிறோம். அம்பாள் கோயில் செல்கிறோம். அம்பாள்கோயில் இரண்டு பிராகாரங்களுடன் கூடியது. முதற் பிராகாரத்தில் பஞ்சமுக விநாயகர், முருகன் முதலிய பரிவார மூர்த்திகள் உள்ளனர். முழுதும் சலவைக் கல்லால் திருப்பணி செய்யப்பெற்ற அம்பாள் அகிலாண்டேசுவரி கோயில் நம் கண்ணையும் கருத்தையும் கவரும். அன்னையின் சந்நிதியில் நம் மனம் ஒன்றி நிற்பதை நன்குணரலாம்.

கோட்செங்கட்சோழர் :

மகப்பேறுவேண்டி தில்லையில் சபாநாயகரை வழிபட்ட சோழமன்னன் சுபதேவனின் மனைவி கமலவதியின் வயிற்றில் சிலந்தியின் உயிர் கோச்செங்கட்சோழராகக் கருக்கொண்டது. கமலவதி மகப்பேறுபேறுங்காலத்தில் சோதிடர்கள் இன்னும் ஒரு நாழிகை கழித்துப் பிறந்தால் இக்குழந்தை மூவுலகையும் அரசாளும் என்று கூறக்கேட்ட கமலவதி தன்னை அதுவரை தலைகீழாகக் கட்டிவைக்குமாறுசெய்து உரியநேரத்தில் கோச்செங்கட் சோழரை ஈன்றெடுத்தாள். சிவந்த கண்களோடு பிறந்தமையால் செங்கணான் எனப் பெயர் சூட்டி வளர்த்தாள் தாய். சுபதேவன் உரிய முறையில் குழந்தையை வளர்த்து முடிசூட்டினான்.

கோச்செங்கட்சோழர் முற்பிறவிஉணர்வோடு திருஆனைக்கா இறைவன் திருக்கோயிலைத் திருப்பணிகள்செய்து வழிபட்டார். சோழநாட்டில் பல சிவாலயங்களைத் திருப்பணிகள் செய்வித்தார். தில்லைவாழ் அந்தணர்களுக்கு மாளிகைகள் கட்டிக்கொடுத்து முடிவில் இறைவன் திருவடிநீழலை எய்தினான்.

" செங்கட் பெயர் கொண்டவன் செம்பியர்கோன்
அங்கட் கருணை பெரிதாயவனே
வெங்கண் விடையாய்எம் வெண்ணவலுளாய் "

என்று ஞானசம்பந்தர் சோழன் செங்கணனுக்கு அருள் புரிந்த சிறப்பைப் பாடியருள்கிறார்.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருக்குறுக்கைத் தேவாரத்தில் இவ்வரலாற்றை,

" சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழற் பந்தர்செய்து
உலந்தவண் இறந்தபோதே கோச்செங்க ணானுமாகக்
கலந்தநீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர்தங்கள்
குலந்தனில் பிறப்பித்திட்டார் குறுக்கைவீ ரட்டனாரே "

என்று அருளிச்செய்கின்றார். " எண்தோள் ஈசற்கு எழில் மாடம் எழுபது செய்தான் " என்று திருமங்கையாழ்வாரும் இம் மன்னனைப் போற்றுகிறார்.

தலப்பெருமை

அம்பிகை பூசித்தது :

கயிலைமால்வரையில் ஒருசமயம் இறைவன் யோகத் தமர்ந்தான். இறைவனை அருகில் வைத்துக்கொண்டே இறைவன் யோகத்தமர்ந்ததை எண்ணி அம்பிகை நகைத்தாள். இறைவன் ஏளனத்தோடுநகைத்த அம்பிகையை நிலவுலகம் சென்று தன்னை வழிபட்டு மீளுமாறு பணித்தான். அம்பிகை, திருவானைக்காவை அடைந்து காவிரித் தண்ணீரைச் சிவலிங்கமாகத்திரட்டி வழிபட்டாள். அம்மையின் அன்பிற்கிரங்கிய இறைவன் வெளிப்பட்டு ஞானோபதேசம்புரிந்து அம்பிகையை ஏற்றருளினான். இத்தலத்தில் சிவபிரான் மேற்கு நோக்கியும், அம்பிகை கிழக்கு நோக்கியும் விளங்குகின்றனர். அம்பிகை மாணவநிலையில் உபதேசம் பெற்றமையால் இத்தலத்தில் திருக்கல்யாணவிழா இல்லை.

அம்பிகை பூசித்த ஐதிகமாக நாடோறும் உச்சிக்காலப்பூசையில் அம்பாள்கோயில் அர்ச்சகர் பெண்வேடம்தரித்து சுவாமி கோயிலை வலம்வந்து பூசித்துவரும் வழக்கம் உளது.

நாவல்மரம் எழுந்தது :

சம்பு முனிவர் திருவானைக்காவில் வெண்ணாவல் மரத்தடியில் தங்கித் தவம் இயற்றினார். அம்முனிவன் மடியில் அதிசயமான

வெண்நாவற்பழமொன்று விழுந்தது. அதைக்கயிலைக்கு எடுத்துச் சென்று சிவபிரானுக்கு அளித்தார் முனிவர். பெருமான் அக் கனியை உண்டு கொட்டையை உமிழ்ந்தார். அம்மிச்சிலை முனிவர் உண்டார். அவ்விதை மரமாய் அவர்வயிற்றில் முளைத்தது. முனிவர் இறைவனை வணங்கி வேண்டினர். பெருமான் சம்பு முனிவரை நோக்கி திருவானைக்காவில் வெண்ணாவல் மரமாக முளைத்து வளர்வாய். உன் நிழலில் யாம் அப்புலிங்கமாய்த் தோன்றி அருள்புரிவோம் என்றருளினர். அம்முனிவரே வெண்ணாவல் மரமாக இத்தலத்து முளைத்து பெருமானுக்குத் தனது கிளைகளால் நிழல் செய்கிறார் என்பது புராண வரலாறு. முனிவர் வயிற்றில் தோன்றி அவரது தலையில் வெளிப்பட்டு முளைத்த நாவல் மரத்தின் அடியிலேயே ஆனைக்கா அண்ணல் எழுந்தருளியுள்ளார்.

பிரமன் அருள்பெற்றது :

படைத்தற்றொழிலைச் செய்வதால் செருக்குற்ற பிரமன் தன் ஆக்கம் இழந்து சிவபிரானை வேண்டிப் பல தலங்களிலும் வழி பாடு செய்தான். திருவானைக்காவில் தன் பெயரால் தீர்த்தம் அமைத்து நீராடித் தவமியற்றி அருள்பெற்றான்.

இராமன் வழிபட்டது :

இலங்கைப்போரில் இராவணனைக் கொன்ற பாவந்தீர இராமன் இராமேசுவரத்தில் சிவலிங்கப் பிரதிட்டைசெய்து வழி பட்டார். கும்பகர்ணனைக் கொன்ற பாவந்தீர இத் தலத்தில் சிவ லிங்கப்பிரதிட்டைசெய்து வழிபட்டார். அக்கோயில் அரியமாலீசர் கோயில் அல்லது நிலவிண்பீசுவரம் என்னும் பெயரோடு விளங்குகிறது.

கௌதமர் பராசரர் வழிபட்டது :

தன் மனைவி அகலிகையின் தகாத செயலுக்குச் சாபமளித்து அதனால் மனம் வருந்திய கௌதமர் இத்தலத்திறைவனை வணங்கி அகலிகையைப் பெற்று மகிழ்வுற்றார். பராசர முனிவர் இத்தலத் தில் வேள்வி செய்து இழந்த தந்தையைப் பெற்று இன்புற்றார்.

முத்தாரம் பெற்றது :

உறையூர்ச் சோழ மன்னன் ஒருவன் விலைமதிப்புள்ள முத்தாரம் ஒன்றைக் கழுத்திலணிந்து காவிரியில் நீராடினன். முத்துமாலை கழன்று காவிரியில் விழுந்துவிட்டது. மன்னன்

அம்மாலையை ஆனைக்கா இறைவனுக்காக என்று கூறிச்சென்றனன். அம்மாலை திருமஞ்சனம் எடுப்போர் குடத்தில் புகுந்து நீராட்டும்போது அவ்விறைவனது கழுத்தில் விழுந்தது. இவ்வாறு அவ்வாரத்தை ஏற்று அம்மன்னனுக்கு அருள்புரிந்த சிறப்பை ஞானசம்பந்தரும் சுந்தரரும் போற்றிப் பாடியுள்ளனர். சேக்கிழார் பெரிய புராணத்தில்,

"வளவர் பெருமான் திருவாரம் சாத்திக்
கொண்டுவரும் பொன்னிக்
கிளரும் திரை நீர் மூழ்குதலும்
வழுவிப் போகக் கேதமுற
அளவில் திருமஞ்சனக் குடத்தில்
அதுபுக்காட்ட அணிந்தருளி
தளரும் அவனுக்கு அருள்புரிந்த
தன்மை சிறக்கச் சாற்றினர்"

என்று அருளிச் செய்கிறார்.

திருநீற்றுன்மதில் திருப்பணி :

திருவானைக்கா ஐந்து பிராகாரங்களை உடைய தலம். நான்காவது பிராகார மதில் திருநீற்றுன்மதில் எனப்பெறும். 8000 அடி நீளமும் 5 அடி 6 அங்குலம் அகலமும் 32 அடி உயரமும் உள்ள இம்மதிலை இறைவனே சித்தராகத் தோன்றியிருந்து கட்டுவித்தார். நாடோறும் பணியாளர்களுக்குத் திருநீறளித்து அதன் வழியே அவரவர் செய்த வேலைக்கும் கூலியருளிய இவ்வற்புதத் திருப்பணியை அனைவரும் வியந்து பாராட்டுவர்.

பூசகர் செருக்கடக்கியது :

ஆனைக்கா இறைவனைப் பூசித்து வழிபட்ட பூசகர் செல்வச் செருக்குற்றார். அவர் பரிசிலில் குடும்பத்தோடு கொள்ளிடத்தைக்கடந்து செல்லும்போது ஆற்றின் சுழலில் அகப்பட்டு இறந்தார். அவர் குடும்பத்தில் ஒரு குழந்தைமட்டும் தப்பியது. அக்குழந்தையே பிற்காலத்தில் இறைவனுக்குப் பூசகராகும் பேற்றைப் பெற்றதென்று கூறுவர்.

அடியார்களும் புலவர்களும் :

கவி காளமேகம் அன்னை அகிலாண்டேசுவரியின் அருள் பெற்ற வரலாற்றை அனைவரும் அறிவர். ஸ்ரீரங்கத்தில் திருமடைப்பள்ளியில் பணியாற்றிய வரதன் என்ற வைணவ பரிசாரகன் திருவானைக்காவில் பணிசெய்த மோகனங்கி என்ற உருத்திரகணிகையின்மேல் காதல்கொண்டிருந்தான். ஒருநாள்

மோகனாங்கி 'உங்கையிற்பிள்ளை' என்ற திருவெம்பாவைப் பாடலைப் பாடினாள். அருகிலிருந்த தோழியர் இப்பாடற் பொருளுக்கு ஒவ்வாத நிலையில் இவள் வைணவனோடு தொடர்புவைத்திருக்கின்றாளே ! என்று எள்ளி நகையாடினர். மோகனாங்கி வரதனைச் சிவனடியாராக மாற்றித் திருவானைக்கா கோயிலில் அப் பணியிலமர்த்தினாள்.

ஒருநாள் வரதன் அர்த்தயாம பூசைக்குத் திருவமுது தயாரித்தளித்துக் கோயிலில் உறங்கிவிட்டான். மோகனாங்கியும் அவனை எழுப்பாது இல்லம் சென்றாள். அகிலாண்டேசுவரி அவனைத் தட்டி எழுப்பித் தம் வாய் எச்சிலை விழுங்கச்செய்து அருள்பாலித்தாள். வரதன் வரகவியாய் - காளமேகமாய்க் கவி மழை பொழியத் தொடங்கினான். "திருவானைக்கா உலா" மற்றும் பல தனிப்பாடல்கள் பாடித் தமிழ்வானில் சுடர்விட்டு விளங்கினான்.

தாயுமானவர் அகிலாண்டேஸ்வரியின் அருள்பெற்றவராவார். சைவ எல்லப்பநாவலர், கச்சியப்ப முனிவர், மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை முதலியோர் திருஆனைக்காவைப் போற்றிப் பாடிய புலவர்களாவர்.

மூவர் தேவாரத் திருப்பதிகங்களையும் மாணிக்கவாசகர் திருவாசகத்தையும் ஐயடிகள்காடவர்கோன், அருணகிரிநாதர் முதலியோர் பாடிய திருப்பாடல்களையும் இத்தலம் பெற்றுள்ளது இத்தலத்தின் பெருமையை விளக்கும் பின்வரும் பாடல் தல புராணத்தில் உள்ளது :-

"மேதகைய பயன்விழைவோர் ஞானதலத்
துறைகுவது மேவா தாயின்
ஓதுகஅத் தலப்பெயரை ஆங்கதுவும்
முற்றுதேல் உரைப்பக் கேட்க
காதலொடு கேட்டவரும் மூவகைய
பாதகமும் கடந்து மேலாம்
போத முணர்ந்து எமதடியில் புக்கிருப்பர்
இஃதுண்மை பொலங்கொம் பன்னாய்"

கல்வெட்டுக்கள் :

இக்கோயிலில் பிற்காலத்துச் சோழமன்னர்கள், பாண்டியர்கள், ஹொய்சலர்கள், விஜயநகர அரசர்கள், மதுரை நாயக்கர்கள் இவர்கள் காலங்களில் பொறிக்கப்பெற்ற நூற்றுஐம்பத்து நான்கு கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவைகளெல்லாம் சரித்திரசம்பந்தமான உயரிய செய்திகளைத் தெரிவிக்கின்றன.

மெய்கண்ட நூல்கள்

(ஆராய்ச்சி முன்னுரை)

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ.,

(மலர் 36, இதழ் 12, பக்கம் 604 இன் தொடர்ச்சி)

ii. **திருக்களிற்றுப்படியார் :**

இதன் பெயர்க்காரணம் சுவையுடையது. ஆசிரியர் தாழ்ந்த இனத்தவர் என்பதால் இந்நூலைப் பலரும் ஏற்றுக் கொள்ள மறுத்தனர். மெய்ப்பொருள் காண்பதறிவு என்ற வகையில் ஏற்றுக்கொண்டசிலர், இந்நூலைத் தில்லையில் கூத்தப்பெருமான் எழுந்தருளியுள்ள பஞ்சாட்சரப்படியில் எடுத்துச்சென்று வைத்தனர். அவ்வாறு வைத்த அளவில் அப்படியிலுள்ள கல்லானை தன் துதிக்கையால் எடுத்து மேற்படியில் கொண்டு அந்நூலை வைத்தது. இதனைக்கண்ட பலரும் இந்நூலின் பெருமையை உணர்ந்தனர். இதனால் இந்நூல் இப்பெயர்பெற்றது என்று கூறுவர்.

இந்நூலில் பல்வேறு அரிய குறிப்புக்கள் உள்ளன. குருவருள், குருவடிவின் இன்றியமையாமை, அடியவர், வரலாறு முதலியன இந்நூலில் மிக ஆழமாக எண்ணப்பட்டுள்ளன. கடல்நீரை நேரே பயன்படுத்துதற்கியலாது. மேகம் அந்நீரை முகந்து மழையாகப் பொழியின் அதனை நாம் அனைவரும் பயன்படுத்தலாம். அதைப்போன்றே மெய்ந்நூற்பொருளையும் நேரே உணர்தல் அருமை உடையதாகும். அதனை முன்னமேயே உணர்ந்து அநுபவப்பயனுடைக்கொண்டிருக்கும் ஞானாசிரியனைக் கொண்டு உணரமுற்படின், எளிதிலும் இனிதிலும் உணரலாம் என இந்நூல் கூறுவது எண்ணற்குரியது. ஆவின் மலத்தைக் கொண்டு பிற மலங்களைப் போக்குதலைப்போன்றே, ஞானாசிரியனும் உருவத் திருமேனிகொண்டே பிற உயிரின் உருவங்களைப் (அஃதாவது பிறப்பினை) போக்குவன் எனக் கூறியிருக்கும் உண்மை தெளிவாக அனைவரும்புரிந்துகொள்ளுதற்குரியதாகும். சிவதன்மத்தை வல்வினை, மெல்வினை என வகைப்படுத்தி

விளக்கியிருப்பது இந்நூற்குரிய சிறப்புக்களில் ஒன்றாகும். இவ்வாறே தாம் எடுத்துக்கொண்ட அரிய பல உண்மைகளை விளக்குதற்கு அடியவர்களின் அருட்செயல்களை ஆங்காங்கு கூறியிருப்பதும், இந்நூற்கே உள்ள தனிச்சிறப்பாகும். சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், மங்கையர்க்கரசியார், அரிவாட்டாயர், சிறுத்தொண்டர், சண்டேசுவரர், திருக்குறிப்புத்தொண்டர், ஏயர்கோன், கலிக்காமர், மூர்க்கர், மூர்த்தியார், கண்ணப்பர், சேந்தனர் ஆகியோரின் அருட்செயல்களும், வரலாறுகளும் இவ்வகையில் இடம்பெற்றுள்ளன. அடியவர்களின் வரலாறுகளேயன்றி அவர்களின் அருள்மொழிகளும் இந்நூற்கண் பொன்னேபோல் போற்றப்பெற்றுள்ளன. "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை", "ஈறாய் முதலொன்றாய்", "சிவனென யானும் தேறினன் காண்க" என்ற அருள்மொழிகள் இவ்வகையில் இடம்பெற்றுள்ளன. இவ்வாறே 'சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகின்', 'வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை' என்ற திருக்குறட்பாக்களும் கொண்டெடுத்து மொழியப்பெற்றுள்ளன.

ஆ. சிவஞானபோதம், சிவஞானசித்தியார் - சுபக்கம், சிவப்பிரகாசம் :

திருவருள் சமய குரவர்களைக்கொண்டு சைவ சமயத்தைப் பரவச்செய்ததைப்போன்றே, அதன் தலையாயதும் நிலையாயதுமாய ஒப்பற்ற கொள்கைகளையும் சந்தான குரவர்களைக்கொண்டு பரவச்செய்தது. அவ்வருள்வழி நின்று சமயக்கொள்கைகளை அளவைகளானும் பொருந்துமாற்றானும் தெளிவாக எடுத்துக் கூறிய முதற்குரவர் மெய்கண்டாரே ஆவர். வேத ஆகமப் பொருள்களிலும் திருமுறைகளிலும் காணும் கருத்துக்கள் அனைத்தையும் அடிப்படையாகக்கொண்டு, ஐயந்திரிபிற்கு இடனின்றி எடுத்துரைத்த முதல்நூலும் இதுவேயாகும். மிண்டிய மாயாவாதம் என்னும் சண்டமாருதம் சுழித்தடித்து ஆர்த்து மக்களை எங்கோ திசைதிருப்பி அழைத்துச்செல்லும் சமயத்தில் ஞானக் கதிரவன் எனத் தோன்றி மலைவுற்றிருந்த மக்களை மலைவறத் திருப்பிய பெருமை மெய்கண்டாருக்கே உரியதாகும். 'பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித மெய்கண்ட நாதனருள் மேவுநாள் எந்நாளோ?' எனப் பின்வந்த அருளாளராய தாயுமானவர் உளங்கொண்டு போற்றுவது இத்திருப்புமையத்தை நினைவுகூரக் கூறியதே ஆகும். சைவசித்தாந்த சாத்திரத் திருமரபு மெய்கண்டாரையே முதன்மையாகக் கொண்டு வளர்ந்து வருகின்றது. இதன் வழி நூலாகத் திகழ்வதே

சிவஞான சித்தியாராகும். 'மெய்கண்டான் நூல் சென்னியில் கொண்டு சைவத்திறத்தினைத் தெரிக்கலுற்றும்,' என அருணந்தி சிவாசாரியார் கூறுவது தம் வழிநூல் அமைப்பைக் குறிப்பதாகும். இந்நூல் சிவஞானபோதக் கருத்தை முழுமையாகத் தழுவிச் செய்யப் பெற்றதாகும். 'சிவத்திற்குமேல் தெய்வமில்லை சித்திக்குமேல் நூலில்லை' என வரும் பழமொழியாலும், 'பார் விரித்த நூலெல்லாம் பார்த்தறியின் சித்தியிலே ஓர் விருத்தப் பாதி போதும்' என வரும் குருஞானசம்பந்தர் திருவாக்காலும், 'வள்ளுவர் நூல் அன்பர் மொழி வாசகமே' என வரும் பழம் பாடலாலும் இந்நூலின் பெருமை விளங்கும்.

இந்நூல் இரு பிரிவுடையது. ஒன்று சுபக்கம்; பிறிதொன்று பரபக்கம் என்பது. பரபக்கம் என்ற பகுதியில் கூறப்பெறும் கருத்துக்கள் மறுப்பு வகையில் அமைந்த நூல்கள் என்ற பகுதியில் விளக்கப்பெறும். சுபக்கம் என்பது தமது கொள்கை ஒன்றையுமே எடுத்துக்கொண்டு ஆராய்வதாகும். சிவப்பிரகாசம் என்பது இவ்விரு நூல்களையும் தழுவி எழுந்ததொன்றாகும். 'இதனைத் தெரித்தகுருமுதல்வர்' என தொடங்கும் அவர் திருவாக்கினால் உணரலாம். இவ்விரு நூல்களையும் தழுவிச் செய்யப்பட்டதேனும் இந்நூலின் அமைப்புமுறை அவற்றினும் ஒருவாற்றான் தனித்தன்மை பெற்றதே ஆகும். ஆதலின் இதனைச் சார்பு நூல் என்பர். சிவஞானபோதமும் சிவஞான சித்தியாரும் பொது, உண்மை என இரு அதிகாரங்களாகப் பிரித்துக் கொண்டதைப் போலவே இந்நூலும் பிரித்துக் கொள்கிறது. எனினும் அந்நூல்கள் பிரமாண இயல், உண்மை இயல், சாதன இயல், பயனியல் என பிரித்துக்கொண்டு பேசியதைப்போன்று இந்நூலில் பேசப்பெறவில்லை. எனினும் முப்பொருள் உண்மைபற்றிக் கூறிய கருத்துக்கள் முழுமையும் ஒத்தவை. ஆதலின் இம்மூன்று நூல்களினும் பொதுவாகவும் ஒத்ததாகவும் கூறப்பெறும் முப்பொருள் உண்மையைக் கீழ்க் கண்டவாறு சுருக்கிக் காணலாம்.

இறை (பதி) :-

உலகம் தோன்றி நின்று அழியுந்தன்மையது. அது இவ்வாறு தோன்றி நின்றழியினும் அதில் ஒரு நெறிமுறை அமைந்துள்ளது. ஆதலின் அது ஒருவனால் தோற்றுவிக்கப் பெற்றிருத்தல் வேண்டும். அவ்வொருவனே அழித்தற் கடவுளாய சிவபெருமானுவன். அவன் அரு, உரு, அருவுரு ஆகிய மூவகைத் திருமேனிகளையும் கொண்டு உயிர்களை ஆட்கொள்வன். அவனது

பேராற்றலே சத்தி எனப்பெறும். அது அன்பு (இச்சை), அறிவு (ஞானம்), செயல் (கிரியை) ஆகிய மூத்திறப்படும். இறைவன் அவற்றின் மூலம் உயிர்களைத் தொழிற்படச் செய்வன். இறைவன் உயிர்களைக் காத்தற்காக ஐந்தொழில்களையும் ஐவரைக்கொண்டு நிகழ்த்துவன். அவ்வைந்தொழில்களாலும் உயிர்கள் பக்குவமடைந்து வீடுபெறும். இதனால் இத்தொழில்களை அவன் செய்விப்பது தன் பொருட்டன்று, உயிர்களின் பொருட்டே என்பதும் விளங்கும். அயன் முதலிய ஐவராலும் அத்தொழில்களை அவன் செய்தலின் அவற்றால் தான் வேறுபடுதல் இலன். இறைவன் உயிர்களிடத்து ஒன்றாயும், வேறாயும், உடனாயும் இருந்து உதவுவன் உயிர்களுக்கு இறைவன் அறக்கருணை கொண்டும் மறக்கருணை கொண்டும் இன்பத் துன்பங்களை நுகர்விப்பன். மறக்கருணை என்பது மகுத்துவன் அறுவை சிகிச்சை செய்வது போலவும், பெற்றோர் தம் இன்புதல்வரைத் திருத்த ஒறுப்பது போலவும் ஆதம். அவன் அருளின்றி உயிர்கள் உணரவோ உய்யவோ வழியில்லை.

உயிர் (பசு) :-

உயிர்கள் எண்ணிலாதன; அழிவற்றன; ஆணவத்தோடு பிணிப்புற்று நிற்பதால் அறியாமை உடையனவாய் விளங்குகின்றன. இம்மல வேறுபாட்டால் உயிர்களை மூவகைப் படுத்தலாம். ஆணவமலம் மட்டும் உடையவரை விஞ்ஞான கலர் என்பர். ஆணவம், கன்மம் ஆகிய இரு மலமும் உடையவரைப் பிரளயாகலர் என்பர். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூவகை மலங்களையும் உடையவரைச் சகலர் என்பர். இவருள் முன்னவர்க்கு இறைவனே உள்நின்று அருள்வன். இரண்டாமவர்க்கு அம்மையப்பராய் ஆனேற்றின்மீது எழுந்தருளி வீடுபேறு அளிப்பன். மும்மலமுடையார்க்கு மானுடவடிவம் தாங்கிக் குருவாக வந்து அருள்பாலிப்பன். உயிர் அவ்வாணவத்தால் செய்யும் இருவினைகளின் தன்மைக்கேற்ப இறைவன் உடல் நல்குவன். அவற்றின் வாயிலாக அவை நுகருங்கால் மேலைக்கு வித்தாகிய இருவினைகளைப் புரிந்து பிறப்புப் பிணி, மூப்பு இறப்பு ஆகியவற்றைப் பெற்றுக் காற்றாடி போலவும், சுழலும் வண்டிச் சக்கரம் போலவும் பல பிறவிகள் எடுத்துத் திரிந்துகொண்டிருக்கின்றன. அப்பிறப்புக்கள் நால்வகைத் தோற்றத்தன. அவை முட்டையில் தோன்றுவனவும், வியர்வையில் தோன்றுவனவும், வித்து வேர் முதலியவற்றில் தோன்றுவனவும், கருப்பையில் தோன்றுவனவுமாம். இந்நால்வகைத் தோற்றத்தினுள்ளும் உயிரினங்கள் எழுவகைப் பிறப்பினை எடுக்கும். அவையாவன:- (1) தாவரம்

2 ஊர்வன, 3. நீர்வாழ்வன 4 விலங்கு 5. பறவை 6. மனிதர் 7. தேவர் என்பன. இவை 84 நூறாயிரம் பிறப்பு வேற்றுமை யுடையன. தாவரம் 19 நூறாயிரம் பிறப்பு வேற்றுமையுடையன. ஊர்வன 15 நூறாயிரம் பிறப்பு வேற்றுமை உடையன. நீர் வாழ்வன, பறவை, விலங்கு ஆகியன ஒவ்வொன்றும் 10 நூறாயிரம் பிறப்பு வேற்றுமையுடையன மனிதர் 9 நூறாயிரம் பிறப்புவேற்றுமையுடையர் தேவர் 11 நூறாயிரம்பிறப்புவேற்றுமை யுடையர். 'உரை சேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனி பேதம்' என்னும் ஞானசம்பந்தர் திருவாக்கு இவ்வுண்மையை உணர்த்தும்.

தளை (பாசம்) :-

நெல்லினிடத்து உமியும், செம்பினிடத்துக் களிம்பும் தோன்றுதொட்டே உளவாதல்போல உயிரினிடத்தும் ஆணவ மலம் தோன்றுதொட்டே இருந்துவருகிறது. இவ்வாணவம் இருளினும் கொடியது. இருள் பிற பொருளைக் காட்டாதாயினும் தன்னையேனும் காட்டும். இது தன்னையும் காட்டாது. ஆதலின் இது அதனினும் கொடியதாம். இவ்வாணவ மலத்தால்தான் உயிர் அறியாமையைப் பெறுகிறது. அதனால் துன்பமும் அடைகின்றது. இதனை நீக்கவே இறைவன் உடல் முதலிய கருவி கரணங்களைத் தருகின்றான். இவற்றை இறைவன் மாயையினின்றும் தோற்றுவிக்கின்றான். இவற்றை இறைவன் தருவது உயிரை மேலும் மயக்குதற்கன்று; விடியுமளவும் விளக்கினைக் கொள்வது போல வினை நீங்குமளவும் இவற்றைக் கொள்ளவேயாம். இதனை மாயா மலம் என்பர்.

இவ்வாறு உயிர் உடலொடு கூடி வாழுங்கால் முன் செய்த வினைக்கீடானவற்றை நுகர்வதோடு மேலும் சில நல்வினை தீவினைகளையும் செய்து விடுகின்றன. அவற்றால் மேலும்மேலும் பிறவியில் கட்டுண்ணும் நிலை உயிர்க்கு ஏற்படுகின்றது. இவ்வாறு வரும் நல்வினைதீவினைகளையே கன்மம் என்பர். இவ்வினைப் பயனை இறைவன் ஒரே பிறவியில் நுகர வைப்பதில்லை. உயிர்களால் அளவின்றி ஈட்டப்பெற்ற வினைகளின் பயன்களுள் இறந்த உடம்புகளான் நுகர்ந்தனவும், பிறந்த உடம்புகளான் முகந்து நின்றனவும் ஒழியப்பின்னும் நுகர்தற்குரியனவாய்க் கிடக்கும் வினைகளைப் பழவினை (சஞ்சிதம்) என்பர். பிறந்த உடம்பால் முகந்து நின்றவற்றை நுகர்வினை (பிராரத்துவம்) என்பர். நுகர்ந்து வரும்பொழுது மேலும் ஈட்டப்பெறும் வினைகளை ஏறும் வினை (ஆகாமியம்) என்பர். இவற்றுள் பழவினை

குருவின் அருள் நோக்கத்தால் நீங்கும். வருவினை குருவருள் வழிநின்று முனைப்பின்றிச் செய்யப்படும் சிவபுண்ணியத்தால் வாராது ஒழியும். எனவே பிறந்த உடம்பால் நுகர்ந்து நின்ற வினை ஒன்றே, நுகர்ந்து ஒழிப்பதற்குரியதாகும். இறையருள் வழிநின்று உலகினில் என்செயலெலாம் உன் விதியே! நீயே உள்நின்றும் செய்வித்தும் செய்கின்றாய் என்றும், நிலவுவதோர் செயல் எனக்கு இன்று உன் செயலே என்றும் நினைந்தும் வாழ்ந்தும் வரின் இவ்வினைப் பயனும் துன்புறாது வாழலாம் இம்மூவகை மலங்களோடு திரோத மலம், மாயேயம் என்ற இரண்டையும் கூட்டிப் பஞ்சமலம் என்றலும் உண்டு. இறைவனின் அருட் சக்தி உயிர் வினைப்பயனை நுகர்ந்து தீர்க்குமளவும் உண்மையை உணரவொட்டாமல் சிறிதளவு மறைக்கும். அவ்வாறு செய்வது உயிர் வினையினின்றும் நீங்குதற்காகவேயாகும். எனினும் வினைப்பயனை நுகருமளவும் உண்மை உணராது மறைத்தல்பற்றி இவ்வருட் சக்தியையும் மலமென்பர். இதுவே திரோதான சக்தியாகும். இறைவன் நேரே ஐந்தொழில் நடத்துதற்கு இடனாக இருக்கும் மூலப்பொருளைச் சுத்தமாயை என்பர். இதன் திரட்சியே மாயேயம் என்பது. உயிரிடத்திருக்கும் அறிவு, செயல்கள் ஆகியவற்றை வெளிப்படுத்தற் பொருட்டும், வினைப்பயன்களை நுகர்தற்பொருட்டும் உடல், கருவி உலகு, நுகர்ச்சி ஆகியவற்றைத் தோற்றுவித்தற்குக் காரணமாய் இது நிற்கும். இதுவும் உயிர் ஆணவக் கட்டினின்றும் நீங்குதற்கு உதவி செய்வதே ஆகும். எனினும் ' இதனால் தோற்றுவிக்கப்பெறும் உடல் கருவி, உலகம் முதலியவை மயங்குதற்கும் ஏதுவாய் இருத்தலின் இதனையும் மலம் என்றனர். 'மையல் மானுடமாய் மயங்கும் வழி ஐயனே தடுத்தாண்டு அருள் செய்' எனவரும் சேக்கிழார் வாக்கும் இவ்வுண்மையை விளக்கும்.

(தொடரும்)

அட்டவீரட்டத் தலங்கள்

" பூமன் சிரங்கண்டி அந்தகன் கோவல்புரம் அதிகை
மாமன் பறியல் சலந்தரன் விற்குடிமா வழுவூர்
காமன் குறுக்கையமன் கடவூர் இந்தக் காசினியில்
தேமன்னு கொன்றை யுந்திங்களுஞ் சூடிதன்
[சேவகமே "

அறுவகைச் சமயங்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. ந. ரா. முருகவேள் M. A., M. O. L.,

அறுவகைச் சமயங்கள் என்னும் தொடர், தொன்று தொட்டு வழங்கிவருவது. "அறுவகைச் சமயத்து அறுவகை யோர்க்கும் வீடுபேறாய் நின்ற விண்ணோர் பகுதிகீடம் புரையும் கிழவோன்" என்று திருவாசகத்திலும், "அறுவகைச் சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருளாய், வேறும் குறியது உடைத்தாய் வேத ஆகமங்களில் குறி இறந்து......" என்று சிவ ஞான சித்தியாரிலும் வருவது காணலாம்.

சமய தத்துவநூலாசிரியர்கள், இவ்வறுவகைச் சமயங்கள் யாவை? என்பன குறித்துத், தத்தம் நூல்களிற் பலவேறு வகைகளிற் குறிப்பிட்டுள்ளனர். 1. சைவம்: சிவபிரானை வழிபடுவது. 2. வைஷ்ணவம்: விஷ்ணுவை வழிபடுவது. 3. சாக்தம்: சக்தியை வழிபடுவது 4. சௌரம்: சூரியனை வழிபடுவது. 5. காணபத்தியம்: கணபதியை வழிபடுவது 6 கௌமாரம் குமரன் ஆகிய முருகனை வழிபடுவது, எனச் சிலர் விளக்கம் கூறுவர்.

சமயங்களைப் புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என நான்கு வகைப்படுத்தி, ஒவ்வொன்றினையும், பின்வருமாறு ஆறுவகையாகவும் கூறுவது உண்டு, 1. புறப்புறம்: உலகாயதம், மாத்தியமிகம், யோகாசாரம், சௌத்திராந்திகம், வைபாடிகம் ஆருகதம். 2. புறம்: தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம். 3. அகப்புறம்: பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாதம். 4. அகம்: பாடாணவாதம், பேதவாதம், சிவசமவாதம், சிவசங்கிராந்தவாதம், ஈசுர அவிகாரவாதம், சிவாத்துவிதம் எனத் தனித்தனியே அறுவகைச் சமயங்கள் இவையிவை எனச் சிலநூல்கள் குறிப்பிடுகின்றன.

எனினும், பொதுவாக 'அறுவகைச் சமயங்கள்' என இந்தியத் தத்துவ நூல்களிற் குறிக்கப்பெறுவன, நியாயம் வைசேடிகம், சாங்கியம், யோகம், மீமாஞ்சை, வேதாந்தம் என்னும் ஆறுமேயாம். இவற்றை "ஷட்தரிசனங்கள்" என வழங்குவர். இவைகளை விளக்கியருளிய ஆசிரியர்களின் பெயர்கள் முறையே பின்வருவனவாகும். 1. அக்கபாதர், (கோதமர்) - நியாயம் 2. கணாதர் - வைசேடிகம் 3. கபிலர் - சாங்கியம் 4. பதஞ்சலி - யோகம் 5. சைமினி - மீமாம்சம். 6. வாதராயணர் (வியாசர்) - வேதாந்தம்.

பழங்காலத்திலேயே இந்திய நாடானது கிரேக்கர் உரோமர் முதலிய மேலைநாட்டு மக்களுடன் வாணிகம் முதலிய தொடர்புகள் கொண்டிருந்தது. அதன் பயனாக, இருநாடு களும் தமக்குள் பல பொருள்களைக் கொண்டும்கொடுத்தும் கலந்து உறவாடி மகிழ்ந்தன. இந்திய நாட்டுத் தத்துவக் கொள்கைகளை ஆராய்ந்துணர்ந்த சர் வில்லியம் ஜோன்ஸ் (Sir William Jones) என்னும் பேரறிஞர் கூறியிருக்கும் ஒப்புமை ஆய்வுக் கருத்துரை, இங்கு நாம் உணர்ந்து மகிழ்ந்து பயன்பெறத்தக்க செய்தியாகும்.

"இந்தியத் தத்துவக் கொள்கைகளுள், நியாயம் பெரிபடெடிக் கொள்கையையும் வைசேடிகம் ஐயோனிங் கொள்கையையும், மீமாம்சம் பிளேட்டோவின் கொள்கை யையும், சாங்கியம் இட்டாலிக் கொள்கையையும், யோகம் ஸ்டாயிக் கொள்கையையும், பெரிதும் ஒத்துள்ளன. எனவே கோதமர் என்னும் அக்கபாதர் அரிஸ்டாட்டிலை யும், கணாதர் தேல்சையும், சைமினி சாக்ரட்டீசையும், வியாசர் எனப்படும் வாதராயணர் பிளேட்டோவையும், கபிலர் பித்தாகரசையும், பதஞ்சலி ஜெனுவையும் போன்ற வர்களாகக் காணப்படுகின்றனர்." *

---

* "Of the philosophical schools, it will be sufficient here to remark that the first Nyaya seems analogous to the Peripatetic; the second, sometimes called Vaiseshika to the Ionic; the two Mimamsas, of which the second is often distinguished by the name of Vedantha, to the Platonic; the first Samkhya to the Italic; and the second of Patanjali to the stoic

இங்ஙனமே கோல்ப்ருக் Cole brooke) ரிச்சர்ட் கார்பே (Richard Garbe) முதலிய பல அறிஞர்களும் கருதுகின்றனர். மேனாடு கீழ்நாடுகளின் தத்துவக்கொள்கைகளையும், நூல்களையும் ஒப்பிட்டு ஆராய்ந்து உணர விரும்புவர்களுக்கு இக்குறிப்பு மிகவும் பயன்படும்.

---

philosophy; so that Goutama cor responds with Aristotle, Kanada with Thales Jaimini with Socrates, Vyasa with Plato, kapila with Pythogores, and Patanjali with Zeno"

— Sir William Jones,
The wisdom of Hinduism.

'தர்மகர்த்தா' முறையைக் - - கடைப்பிடிக்க வேண்டும்

பிரதமர் அறிவுரை.

மேலை நாடுகளில் பணம் இருந்தபோதிலும் அமைதி இல்லை. அம்மக்கள் தங்களுக்கு வழிகாட்ட இந்தியாவைத்தான் எதிர் நோக்கியுள்ளனர். ஆனால் நாம் முதலில் ஒழுங்காக இல்லா விட்டால் மற்றவர்களுக்கு ஆலோசனை வழங்க இயலாது.

* * * * * *

"காந்திஜி கூறிய "தர்மகர்த்தா" முறை பணம் படைத்த வகுப்பினருக்கு மட்டுமல்ல; உழைக்கும் வர்க்கத்தினரும் இதைக் கடைப்பிடிக்க வேண்டும் தாங்கள் செய்யும் தொழில்களின் "தர்ம கர்த்தாக்களாக" அவர்கள் தங்களைக் கருதவேண்டும்"

* * * * * *

"தர்மகர்த்தா" முறை சகலருக்கும் பொருந்தும். அதிகாரத்தில் உள்ளவர்களுக்கும்கூட இது பொருந்தும்".

நன்றி! — தினமணி, 5—12—77.

அகத்திக்கீரை

திரு. மு. விட்டல் எம். எஸ்ஸி., (வேளாண்மை)

முன்னுரை :

" உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே "

எனத் திருமூலர் மெய்ஞ்ஞானம் பெறுதற்பொருட்டு உடலோம்பலுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றார். அழிந்து போகக்கூடிய உடம்பை உயிர் இருக்கும்வரை ஆரோக்கியத்தோடும், உறுதியோடும் இயங்கும்படிப் பாதுகாத்தல் வேண்டும். இதையே திருமூலர்,

" உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின் றேனே !

என எளிதாக விளக்குகின்றார்.

அளவுகளையும் உடலை ஒம்புவதற்கு நல்ல சத்துணவுகளையும், உடலை நோய்நொடிகளினின்று காக்கும் காப்புணவையும் வேண்டிய அளவு உண்ணல் வேண்டும். நோயற்ற வாழ்வில் வாழ்தற்கு அருட்பிரகாச வள்ளலார் அவர்களும்

" .... நோயற்ற
வாழ்வில் நான் வாழவேண்டும் "

என இறைவனை வேண்டுகின்றார்கள்.

நோயற்ற வாழ்விற்கு விஞ்ஞான முறையில் உடலைக்காக்கும் காய்கறி, கீரை, பழங்களை உண்ணல் வேண்டும் என்று ஊட்டச் சத்துணவுத் திட்ட வல்லுநர்கள் வலியுறுத்துகின்றனர்.

கீரை வகையில் அகத்திக் கீரையும் ஒரு சிறந்த சத்துள்ள கீரையாக உபயோகப்படுத்தப்படுகிறது. தமிழக மக்களின் உணவில் குறைந்தது மாதம் ஒரு முறையேனும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கருதியோ என்னவோ அமாவாசை முதலிய முக்கிய தினங்களில் அகத்திக்கீரையை அவசியம் சமையலில் சேர்க்கச் செய்துள்ளனர்.

சத்தும், மருந்துக் குணமும் :

அகத்திக்கீரையைச் சாம்பாராக (பருப்புடன்) ச் செய்வர். அல்லது தனியே துவட்டலாகச் செய்துண்பர். இவ்வாறு வாரம் ஒருமுறை உண்டால் உடல் சூடு தணியும், கண்கள் குளிர்ச்சி பெறும். நீரடைப்பு, பித்த மயக்கம் முதலியவை நீங்கும். இவ் இலையை அரைத்து அடிபட்டு இரத்தம் சொரியும் காயங்கட்கு வைத்துக்கட்டினால்சீழ்பிடிக்காது விரைவில்குணம் ஆகும். அகத்திக் கீரை எல்லா மருந்துகளின் வீறுகளையும் கெடுத்துவிடுமாதலால் மருந்துண்ணும் நாட்களில் இதைச்சேர்க்கக்கூடாது. இதிலுள்ள சத்துக்களின் அளவை அட்டவணையில் காணலாம். குறிப்பாக உயிர் சத்து 'எ' அதிகமாக உள்ளது.

இதில் உள்ள சத்துக்களின் அளவானது :

(100 கிராம் கீரையில் உள்ளவை)

ஈரம்	73·1 கிராம்	இதர மாவுப்பொருள்	11·8 கிராம்
புரதம்	8·4 கிராம்	சுண்ணும்பு	1·13 மி. கிராம்
கொழுப்பு	1·4 கிராம்	இரும்பு	3·1 மி. கிராம்
தாதுப்பொருள்	3·1 கிராம்	வைட்டமின் எ	9,000 (I. U)

அகத்தி குடல் புண் முதலியவைகளை ஆற்றும் மருந்தாகவும் பயன்படுகிறது. கால்நடைகட்கு குறிப்பாகக் கறவை மாடுகட்குத் தீவனமாகவும் அகத்திக்கீரை உபயோகப்படுகிறது. சாதாரணமாக வெற்றிலைக் கொடிக்காலில் காற்றடைப்பாகவும் வெற்றிலைக் கொடியை ஏற்றவும் அகத்தி பயிரிடப்படுகிறது. மேலும் கரும்பைச் சுற்றியும் காய்கறித் தோட்டத்தைச் சுற்றியும் சாகுபடி செய்யப்படுகிறது.

நல்ல வியாபார வசதியுடைய நகரங்கட்கு அடுத்துள்ள (நிலங்களில்) கிராமங்களில் ஏக்கரா அளவிலும் பயிரிடப்படுவதுண்டு.

நிலம் தயாரித்தல்:

அகத்தி எல்லாவிதமண்ணிலும்பயிராகும். நிலத்தைமுதலில் 3 அல்லது 4 முறை இரும்புக் கலப்பையால் நன்கு உழுது தொழு உரம் ஏக்கருக்கு 10 வண்டி இட்டு உழுது கட்டிகளை உடைத்து பண்படுத்தவேண்டும். வரப்பிடும் கலப்பையால் (Bond Former) பாருக்கு பார் 1 அடி முதல் 2 அடி இடைவெளி இருக்கும்படி இடம் விட்டுப் பார்கள் அமைக்கவேண்டும்.

விதையளவு:

ஒரு ஏக்கருக்கு 6கிலோ விதைதேவை. ஹெக்டருக்கு 15கிலோ. (4 முதல் 5 படி விதைதேவை) பாரில் விதைக்குவிதை 9 அங்குலம் இடைவெளி இருக்கும்படி 2 அல்லது 3 விதைகளை ஊன்றுதல் வேண்டும். விதை முளைக்க 5 முதல் 7 நாட்கள் ஆகும்.

விதையைப் பக்குவப்படுத்தல்:

விதையைத் தண்ணீரில் 6முதல் 8 மணி நேரம் ஊறவைத்து பிறகு இரவில் 8 முதல் 10 மணி நேரம் வைக்கோலால்மூடி (நெல் விதை முளை கட்டுவதைப் போல்) வைத்து மறுநாள் காலையில் ஊன்றினால் ஒரிரு நாட்களில் நன்கு முளைத்துவிடும். பொதுவாக முளைக்காத இடங்களில் விதையை மேற்கூறியவாறு பக்குவப் படுத்தி ஊன்றி விடலாம்.) நன்கு முளைத்த 10 அல்லது 15 நாளில் ஒரு செடி அல்லது இரு செடிகளை விட்டு மற்றவற்றை நீக்கிவிட வேண்டும்.

நீர் பாய்ச்சல்:

விதை ஊன்றிய உடனே ஒரு முறையும் பிறகு மூன்று நாள் கழித்து மறு முறையும் பிறகு நான்கு அல்லது ஐந்து நாள்கட்கு ஒரு முறையும் நிலத்திற்கேற்ப நீர் பாய்ச்சலாம்.

மேலுரமிடல்:

பொதுவாகத் தற்போது அகத்திக்கீரையைப் பயிரிடும் விவசாயிகள் இரசாயன உரத்தை உபயோகிப்பதில்லை. ஆயின் இரசாயன உரம் இடின் நல்ல மகசூல் பெற ஏதுவாகும். விதை ஊன்றியபின் 2மாதம் கழித்து ஏக்கருக்கு 5 வண்டி தொழு உரத் துடன் 100 கிலோ கலப்புரம் எண் 10 (10 : 5 : 5 :) கலந்து ஒவ் வொரு செடிக்கும் வைத்து நீர் பாய்ச்சுதல் வேண்டும். (எருவும் இரசாயன உரக் கலவையும் ஒரு செடிக்குக் குறைந்தது 75கிராம் அளவு இடுதல் வேண்டும்.) மேலும் 4 மாதங்கட்கு ஒரு முறை மேற் கூறியவாறு கொத்தி உரமிட வேண்டும். அகத்தியைத் தொடர்ந்து 2 முதல் 3 ஆண்டுகள் நிலத்தில் வளர்க்கலாம். ஆக

ஒவ்வொரு 4 மாதத்திற்கும் உரமிடல் அவசியம். இல்லாவிடின் 6 மாதத்திற்கு ஒரு முறையாவது உரமிடல் நன்று.

பின்னேர்த்தி :

களை இன்றி வைத்திருத்தல் வேண்டும். உரம் வைக்கும் பொழுது மண் அணைத்தல் வேண்டும்.

அறுவடை :

விதை ஊன்றிய 60 அல்லது 70 நாட்களில் 5 அடி உயரம் அளவு வளரும். அப்போது முதல் அறுவடையாக ஒரிரு இலைக் காம்பு ஒரு ஏக்கருக்கு முதல் முறையாக 700 முதல் 800 கிலோ கத்தை (இரண்டு கையும் ஒன்றுகச் சேர்த்து பிடிக்கும் அளவு) கிடைக்கும். ஒரு கத்தை 25 பைசா விதம் விலை போகும்,

பிறகு மாதம் ஒரு முறை அறுவடை செய்யலாம். இரண்டாம் முறை அல்லது மூன்றும் முறையாக அறுவடை செய்யும்போது ஏக்கருக்கு 1000 கிலோ முதல் 1100 கிலோ கத்தைகள் கிடைக்கும். ஒரு கத்தை சுமார் 2 கிலோ அளவு இருக்கும். ஆக ஒரு ஆண்டில் 20,000 முதல் 25 000 கிலோ அகத்திக்கீரை மகசூலாகும்.

பூச்சியும், நோயும் :

விதைத்த 20 நாளில் பி எச். சி. மருந்து (பி. எச். சி 10 %) 15 கிலோ தூவி இலைப் புழுவைக் கட்டுப்படுத்தலாம்.

வெட்டுப் புழு :

வெட்டுப்புழுவைக் கட்டுப்படுத்த பி. எச். சி. 10 %. மருந்தை 20 கிலோ தூவுதலோடு மண்ணில் இட்டுக் கிளறிவிட வேண்டும்.

45 முதல் 60 நாளில் எகடின் தெளித்தால் இலைப் புழுவையும் தண்டுப் புழுவையும் தடுக்க முடியும். தண்டுப் புழு அதிகமாயின் செல் திரவத்தில் ஊடுருவி வேலை செய்யும் பூச்சிமருந்தொன்றைத் தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

வீட்டின் பின்புறம் :

ஒவ்வொரு வீட்டின் பின்புறம் உள்ள தோட்டத்தில் நான்கைந்து அகத்திச்செடி இருப்பின் அவ்வீட்டிற்குத் தேவையான கீரை வாரம்தோறும் கிடைக்கும். சாகுபடியும் மிக எளிதே.

செய்திகள்

ஸ்ரீ மெய்கண்டார் குருபூஜை விழா

தருமையாதீனத்தில் :

இறைவனையடையும் நெறிகளாகிய அன்புநெறி, அறிவுநெறி என்ற இரண்டனுள் அறிவு நெறியைச் சாத்திரத்தின்வழிவிளக்கிய சந்தானாசாரியர் நால்வருள் முதலாமவராகத் திகழ்பவர் ஸ்ரீ மெய்கண்டார் ஆவார். இவரது குருபூஜைத் திருநாள் திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் இவ்வாண்டு ஐப்பசித்திங்கள் 25-ஆம் நாள் (16—11—71) வியாழக்கிழமையன்று விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. காலை மாலை இருவேளைகளிலும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்கு பிரசாதம் வழங்கியருளினார்கள். அன்று மாலை 6-30 மணி அளவில் வித்துவான். திரு. மு. ஆறுமுக தேசிகர் அவர்களும், தருமையாதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான். திரு. வி. சபேசன் அவர்களும் முறையே "சிவஞானபோதம்". "மெய்கண்டார் அருள் வரலாறு" என்ற தலைப்புக்களில் விரிவுரையாற்றினார்கள். அன்பர்கள் பலர் கேட்டுப் பயன்பெற்றனர்.

திருப்பெண்ணாகடத்தில் :

ஸ்ரீ மெய்கண்டாரின் அவதாரத் தலமாகிய திருப்பெண்ணாகடத்தில் ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனாரின் திருக்கோயிலிலும் திருவெண்ணெய்நல்லூர் ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனார் குருமூர்த்த ஆலயத்திலும் ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனாருக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் சிறப்பு வழிபாடும் நடைபெற்றன. அன்று காலை திருத்தூங்கானை மாடம் அருள்மிகு கடந்தைநாயகி உடனாகிய சுடர்கொழுந்தீசுவரர் திருக்கோயிலில் சுவாமிக்கும் அம்பாளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் அர்ச்சனையும் நடைபெற்றன. அன்பர்கள் பலர் வழிபட்டுப் பயன்பெற்றனர்.

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 26-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகளின் ஜன்மநட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் வழிபாடு 2—12—77 வெள்ளிக்கிழமையன்று திருப்பாற்றுறை ஸ்ரீ மோகநாயகி உடனாகிய ஸ்ரீ திருமூலநாதர் திருக்கோயிலிலும் திருவானைக்கா ஸ்ரீ அகிலாண்ட நாயகி உடனாகிய ஸ்ரீ ஜம்புகேசுவரர் திருக்கோயிலிலும் சுவாமிக்கும் அம்பாளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் அர்ச்சனைகளுடன் நிகழ்த்தப்பெற்றன. வழிபாட்டில் உள்ளூர்ப் பெருமக்கள் பலர் பங்குகொண்டு பயன் பெற்றனர். திருப்பாற்றுறை– திருவானைக்காத் திருப்பதிகங்கள் என்ற நூல் வெளியிட்டு வழங்கப்பட்டது. தேவாரத் திருப்பதிகப் பாராயணம் ஓதுவாமூர்த்திகளால் நிகழ்த்தப்பெற்றது.

திருவானைக்காத் திருக்கோயில் ஊஞ்சல் மண்டபத்தில் சமய விரிவுரை திரு அப்புலிங்கம் பிள்ளை அவர்கள் (கலைவாணர்) தலைமையில் நிகழ்ந்தது. புலவர்மாமணி, நல்லாசிரியர் வித்துவான். திரு அரங்கசாமி அவர்களும், இலஞ்சி திரு. முத்துக்குமாரசுவாமி அவர்களும், தருமையாதீனத் தமிழ்ப்புலவர் வித்துவான். திரு. வி. சா குருசாமி தேசிகர் எம். ஏ., அவர்களும் சமய விரிவுரையாற்றினர்கள் பன்னிரு திருமுறை வார வழி பாட்டுக் குழுவினரும் மற்றும் பலரும் கலந்துகொண்டு வழிபட்டும் விரிவுரைகளைக் கேட்டும் பயன்பெற்றனர்.

கந்தசஷ்டி விழா

வேளூரில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் கந்தசஷ்டி விழா சிறப்புற நிகழ்ந்தது.

இக்கோயிலில் பெருமானுக்கு 11—11—77 வெள்ளிக்கிழமை முதல் தொடங்கி கந்தசஷ்டி விழா சிறப்பாக நடைபெற்றது. 16—11—77 அன்று ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி ஸ்ரீ தையல் நாயகியிடம் வேல்பெறுதலும், மாலை சூரசம்காரமும் நிகழ்ந்தன. பின்னர் ஸ்ரீ செல்வமுத்துக்குமரர் மயில் வாகனத்தில் காட்சியருளல் நிகழ்ந்தது 17—11—77 அன்று ஸ்ரீ செல்வமுத்துக் குமாரப்பெருமான் சித்தாமிர்தத்தில் தீர்த்தம் கொடுத்தருளலும், 18—11—77 அன்று ஸ்ரீ தெய்வயானை திருக்கல்யாணமும், 19—11—77 அன்று ஸ்ரீ வள்ளியம்மை திருக்கல்யாணமும் 20-11-77 அன்று ஸ்ரீ வள்ளி தேவசேனா உடனாகிய ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி வெள்ளிரதத்தில் திருவீதியுலாவருதலும் நிகழ்ந்தன.

இவ்விழா நாட்களில் தருமையாதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான் திரு. வி. சா. குருசாமிதேசிகர் எம்.ஏ., அவர்களால் நாள்தோறும் மாலை 6 மணியளவில் கந்தபுராண விரிவுரை

நிகழ்த்தப்பெற்றது. இந்நாட்களில் முருக பக்தர்கள் ஸ்ரீ செல்வ முத்துக்குமாரப்பெருமானை வழிபட்டும் கந்தபுராண விரிவுரையைக் கேட்டும் முருகன் திருவருள் பெற்றனர்.

மாயூரம் - குமரக்கட்டளையில் கந்தசஷ்டி விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான மாயூரம் - குமரக்கட்டளை ஸ்ரீ வள்ளிதேவசேனை உடனுகிய ஸ்ரீசுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்தில் 11—11—77 வெள்ளிக்கிழமை முதல் தொடங்கி கந்தசஷ்டி விழா, சிறப்பாக நடைபெற்றது. 15—11—77 செவ்வாய்க்கிழமை காலை முருகப்பெருமான் வள்ளி மயில் வாகனத்தில் எழுந்தருளி துலாக்கட்டத்தில் கடைமுகத் தீர்த்தம் கொடுத்தருளும் விழா நடந்தது, அன்று 5 ஆம் திருநாள் ஆதலின் இரவு சகோபுரத்தில் ரிஷப வாகனக் காட்சியும் நடைபெற்றது. 16—11—77 அன்று சூரசம்ஹாரத் திருநாள். அன்று மாலை பெருமான் வேல் வாங்குதலும் ஆட்டுக்கடா வாகனத்தில் எழுந்தருளி சூரசம்ஹாரம் செய்தலும் பின்னர் மயில் வாகனத்தில் எழுந்தருளி வள்ளி தேவசேனு சமேதராய்க் காட்சி கொடுத்தருளலும் நிகழ்ந்தன. 17—11—77 அன்று திருத்தேர்த் திருவிழா சிறப்பாக நடைபெற்றது. குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிக்கு கந்தசஷ்டியை முன்னிட்டு 2—11—77 புதன் கிழமை சஷ்டியன்று இலட்சார்ச்சனை தொடங்கி 16—11—77 புதன்கிழமை கந்தசஷ்டியன்று நிறைவுற்றது. இந்நாட்களில் முருக பக்தர்கள் கந்தசஷ்டி விரதம் இருந்து முருகப்பெருமானை வழிபட்டு அவனருள்பெற்றனர், இந்நாட்களில் மாயூரம் தேசிய உயர்பள்ளித்தமிழாசிரியர் வித்துவான். திரு ஆ. இராமபத்திரன் எம். ஏ., அவர்களால் கந்தபுராண விரிவுரை தேவஸ்தானம் பிரசாரசபா மண்டபத்தில் மாலை 6 மணியளவில் தொடங்கி நிகழ்த்தப்பெற்றது. அன்பர்கள்பலர் கேட்டுப் பயன்பெற்றனர்

கந்தபுராண விரிவுரை

தருமையாதீனத்தில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஆன்மார்த்த மூர்த்தி ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் பூஜைமடத்தில் கந்தசஷ்டி விழா நாட்களை முன்னிட்டு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாணையின்படி கந்தபுராண விரிவுரை நடைபெற்றது.

ஆறேறு உயர்த்திட்ட ஐயர்க்கும் அம்மைக்கும் அருமருந்தாய்நின்ற ஆதிப்பிரான் முருகப்பெருமான். அப்பெருமான் வழிபாடு தமிழர்களால் பல நூற்றாண்டுகளாக மேற்கொள்ளப் பெற்றிருக்கிறது ஐப்பசித்திங்கள் வளர்பிறையில் பிரதமைநாள்

தொடங்கி சஷ்டிநாள்வரை மேற்கொள்ளப்பெறுவது இவ்விரதம். ஆறுநாட்களிலும் காலையில் நீராடி இரண்டு ஆடைகள் தரித்து சந்தியாவந்தனம் முடித்து பிம்பத்திலும் கும்பத்திலும் முருகப்பெருமானை முறையே வழிபடவேண்டும். மோதகம் முதலியவற்றை நிவேதனம் செய்து செவ்வேள் புகழைக் கேட்டிருந்து சிறிது நீருத்தி உபவாசம் செய்யவேண்டும். சஷ்டியன்று முருகவேட்குச் சிறப்பாகப் பூஜையாற்றி பாராயணம் விதிப்படி செய்யவேண்டும். இவ்விரதங்களைக் கந்தபுராணம் விரிவாக விளக்குகின்றது

11—11—77 வெள்ளிக்கிழமை முதல் தொடங்கி 17—11—77 வியாழக்கிழமை முடிய உள்ள நாட்களில் நான்தோறும் மாலை 7 மணியளவில் வித்துவான். திரு. மு. ஆறுமுக தேசிகர் அவர்களால் கந்தபுராண விரிவுரை நிகழ்த்தப்பெற்றது. ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களும் மற்றும் பலரும் கேட்டுப் பயன் பெற்றனர்.

ஆதீனத் திருக்கோயில்களில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில்களில் கந்தசஷ்டி விழாவை முன்னிட்டு சிறப்பு வழிபாடும் கந்தபுராண விரிவுரையும் நிகழ்த்தப்பெற்றன. சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமிதேவஸ்தானத்தில் தருமையாதீனப் புலவரும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் துணைப் பேராசிரியருமான வித்துவான் திரு கு சுந்தரமூர்த்தி எம். ஏ., அவர்களால் கந்தபுராண விரிவுரை நிகழ்த்தப்பெற்றது.

திருவையாறு ஸ்ரீ அறம்வளர்த்தநாயகி உடனுகிய ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமிதேவஸ்தானத்தில் திருவையாறு அரசர்கல்லூரிப் பேராசிரியர் வித்துவான். திரு. சுவர்ணகாளீசுவரன் அவர்களால் கந்தபுராண விரிவுரை நிகழ்த்தப்பெற்றது.

திருக்கடவூர் ஸ்ரீ அபிராமியம்பாள் உடனுகிய ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர் வித்துவான். திரு. மு. சிவச்சந்திரன் எம் ஏ., அவர்களால் கந்தபுராண விரிவுரை நிகழ்த்தப்பெற்றது.

திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் திருவாரூர் ஸ்ரீ சோமசுந்தரம் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான். திரு. சு. மு சுந்தரராசன் அவர்கள் கந்தபுராண விரிவுரை நிகழ்த்தினர்கள். ஆங்காங்கும் முருக பக்தர்கள் பலர் கந்தப்பெருமானைவழிபட்டும் கந்தபுராணவிரிவுரையைக்கேட்டும் பயன்பெற்றனர்.

(தொடர்ச்சி 49 ஆம் பக்கம் பார்க்க).

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(பிங்களஸ்ரீ மார்கழிமீ 1உ முதல் 29உ முடிய)

(16—12—1977 முதல் 13—1—1978 முடிய)

ஸ்ரீ பிங்களஸ்ரீ கார்த்திகைமீ 30உ குருவாரம் அவிட்ட நக்ஷத்திரத்தில் சூரிய உதயம் முதல் 44 நாழிகை 33 விநாடிக்கு சிம்ம லக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரியபகவான் விருச்சிக ராசியிலிருந்து தனுர்ராசி சங்கிரமண மாக தேவர்களின் பிராதக் காலப்பொழுதாகிய மார்கழிமாதப் பிரவேசம் செய்கிறார். மார்கழி மாதம் 1உ சுக்கிரவாரம் ஷடசீதி புண்ணியகாலமாகும். தானியாதிபதி சுக்கிரன் ஆகிறார். சங்கிரமணகால கிரகஸ்திதியின் பலனாவது லோகத்தில் மழை மிகுந்து எல்லாத் தானியங்களும் நிறைய விளைந்து சுபிட்சம் ஏற்படும். உலக நாடுகள் ஒன்றுக்கொன்று பரஸ்பரமாய்ப் பெரிய நாடுகள் சிறிய நாடுகளுக்கும் பாதித்த நாடுகளுக்கும் தொழில்துறை முன்னேற்றத்திற்கு உதவியும் நிவாரணங்களுக்கான பொருள்களைத் தாராளமாக அளித்தும் வரும். ஈஸ்வரகிருபையால் லோகத்தில் சகலமான பிரஜைகளுக்கும் உய்வு ஏற்படும். உலகில் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் தெய்வப்பிறவியாகத் திருவீற்றிருக்கின்ற குருமகான்கள் சிஷ்யகோடிகளுக்கு உபதேசிக்கின்ற ஞான உபதேசங்களினால் இயம்புகின்ற சன்மார்க்க நெறிகளினால் லோக மக்கள் சிவஞானத்துடனும் நற்பண்புடனும் விளங்குவர். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் உஷக்கால விசேஷ பூசைகள், நித்திய பூசைகள், லோகோபகார உற்சவங்கள் சிறப்பாக நடைபெற்று வரும். எல்லாப் பிரஜைகளும் இலட்சுமி கடாக்ஷம் பொருந்தி அறநெறியில் பொருளீட்டி இனிதுவாழ்க்கை நடத்துவார்கள்.

1 மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

(சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ. – அ.)

மேஷராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்ப சுபிட்சம் நன்றாக இருந்துவரும். பணச் செலாவணி சரளமாக இருந்து

கொண்டிருக்கும். புண்ணியஸ்தலபயணம், தெய்வதரிசனங்கள் குருமார்கள் தரிசனங்கள் ஆகிய நற்பலன் ஏற்படும். சகோதரர் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். பத்திர லிகிதங்கள் சம்பந்தமாகத் தீவிரசெயல்முறைகளை ஏற்படுத்தும். புத்திரர்சௌக்கியம் நன்றாக இருந்துவரும். தாம்பத்திய வாழ்க்கை சுமுகமாக இருந்துகொண்டிருக்கும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் சுறுசுறுப்பும் சாமர்த்தியமும் மிகும். செவ்வாய் புதன் சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – உரோகிணி – மிருகசீர்ஷம் ½
(இ. ஊ. ஏ. – ஓ. வ. வி. வூ. – வே. வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் தனாதாயங்கள் திருப்தியாக வந்துகொண்டிருக்கும். புனிதகாரிய செலவும் சரிசமனாக ஆகும். சகோதரர்கள் சௌகரிய வாழ்க்கை நடத்துவர். வீடு வாகனாதிகளில் 9 உக்குமேல் நற்பலன்களை உண்டுபண்ணும். வித்தியாவியாபாராதிகலைத் துறையில் 23 உக்குமேல் விசேஷ பலனைத்தரும். தாரபுத்திரர்களின் சௌகரியம் நன்றாக இருந்துவரும் செய்தொழில் அல்லது உத்தியோகம் நன்மதிப்புடன் விளங்கும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

3. மிதுனம் – மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம் ¾
(கா. கி. – கு. க. ங. ச்சா. – ஹே. ஹோ. ஹ.)

மிதுனராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடக்கும். குடும்பஅபிவிருத்தியில் எல்லாப் பிரச்சினைகளையும் சமாளிக்கும் அளவிற்குப் பணவரவுகள் வந்துகொண்டிருக்கும். சகோதரர் மனஸ்தாபம் வந்து உடன் சரிபடும். வீடுவாகனாதிகளின் அனுபோகம் மேலாக இருந்துவரும். பிதாவின் உடல்நலம் பாதித்து உடன் குணமாகும். புத்திரர் புத்திரிகளுக்கு சௌக்கியபலன் தரும். மனைவிக்கு சிரோபாதைவந்து குணமாகும். ஞாயிற்றுக்கிழமைகளில் சூரியார்ச்சனை செய்துவர நலம் தரும். செய்தொழிலில் அலுவல்கள் விரைவாக நடந்துகொண்டிருக்கும். சனி ஞாயிறு சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்
(ஹி. – ஹு. ஹே. ஹோ. ட. – டி. டு. டே. டோ.)

கடகராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடக்கும். குடும்பஅபிவிருத்தியில் வருமானங்கள் திருப்தியாக வந்துகொண்டிருக்கும், இளைய சகோதரருக்கு 23 உக்குமேல் நற்பலன்களை அளிக்கும். மாதப் பின்பகுதியில் வித்தியாவியாபாராதிகளில்

நற்பலனும், எல்லாவிஷயங்களிலும் வெற்றியும் ஏற்படும். 9வ க்கு மேல் புத்திர பிராப்தி ஒன்று ஏற்படும். தாம்பத்தியவாழ்வில் சுமுகம் நிலவும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் தீவிரமான செயல்கள் நடைமுறைக்குவரும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

5 சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

(ம. மி. மு. மே. – மோ. ட. டி. டு. – டே.)

சிம்மராசி 9 பாதங்களும் சுபபலன் தரும்: தனலாபம் திருப்தியாக வந்துகொண்டிருக்கும். சகலவிஷயங்களிலும் பெருமதிப்பையும் காரியசாதனைகளையும் ஏற்படுத்தும். சகோதரர்களின் சௌக்கியம் மேலாக இருந்துவரும். பூமியில் சொற்ப செலவினங்கள் இருப்பினும் ஆதாயமானதாகும். வாகனசுகம் திருப்தியளிக்கும், புத்திரருக்கு இராசாங்கத்தில் நன்மதிப்பு உண்டாகும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். செய்தொழில்களில் சௌகரியங்களைத்தரும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

(டோ. பா. பி. – பு. ஷ. ண. ட. – பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடக்கும். தனுதி சௌகரியங்கள் மேலாக இருந்துவரும். சகோதரர்களுக்கு சௌக்கியபலன்தரும். மாதபிற்பகுதியில் வித்தியாவியாபாராதி கலைத்துறையில் நற்பலன் ஏற்படும். வீடு வாகனாதிகளில் ஓர் நவீனம் ஏற்படும். பூமி இயந்திரவகையில் ஓரளவு நற்பலன் வந்துகொண்டிருக்கும், தாரபுத்திரர்களின் சௌகரியம் நன்றாக இருந்துவரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் மேல் இடத்தில் அனுகூலங்களை ஏற்படுத்தித்தரும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

(ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் சமயோசிதமாக வருமானங்கள் ஏற்பட்டுவரும். சகோதரர் பந்து அம்மான்களின் ஒத்துழைப்பு அனுசரணைபலம் நன்றாக இருந்துவரும். கட்டிட பிராப்தி பசு பால் பிராப்தி ஏற்படும். தாரபுத்திரர்களின் சுகம் நன்றாக இருந்துவரும். செய்தொழில்களில் அலுவல்கள் சுறுசுறுப்பாக நடந்துவரும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

8. விருச்சிகம் - விசாகம் ¼ - அனுஷம் – கேட்டை.
(தோ. – ந. நி. நு. நெ. - நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடக்கும். குடும்பத்தில் தனதிசௌகரியங்கள் மேலாக இருந்துகொண்டிருக்கும். சகோதரருக்கு மனக்குறை இருப்பினும் சௌகரியங்களை அளித்துவரும். பூமி இயந்திர சாதனங்களில் ஓரளவு அபிவிருத்தி பலன் தரும். இராசாங்கக்காரியங்களில் 23 உ க்குமேல் நன்மதிப்பை உண்டுபண்ணும். வாகன சுகம் திருப்தியளிக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். செய்தொழில்களில் மாதப் பிற்பகுதியில் நல்ல இலாபத்தைக் கொடுக்கும். செவ்வாய் புதன் சுபமாகும்.

9. தனுசு - மூலம் – பூராடம் – உத்திராடம் ¼
(யே. யோ. பா. பி. – பு. த. ப. ட. – பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் சுமாரான பலனைத்தரும். தனவரவுகள் வேண்டிய அளவிற்கு வந்துகொண்டிருக்கும் சகோதரர் ஒத்துழைப்புடன் இருப்பினும் மனக்குறை ஒருபுறம் இருந்துவரும். வீடு வாகன வசதிகளில் நற்பலன் இருந்துகொண்டிருக்கும். உடலில் இருமல், கபம்போன்ற நலிவு வந்து உடன் குணமாகும். புத்திரர்களின் தொழில் துறையில் மத்திம பலனாக இருந்துவரும். தாம்பத்தியவாழ்க்கையில் தெய்வபக்தி மேலிட்டு தானதர்மங்களுடன் நடந்துவரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் கடமைகள் நடந்துகொண்டிருக்கும். சந்திராஷ்டமம் நீங்கியபின் வியாழன் வெள்ளி சுபமாகும்.

10. மகரம் – உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½
(போ. ஜ. ஜீ. – கி. ஞ. கே. கோ. – கா. கி.)

மகரராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் தனவரவுகள் மிதமாக வந்துகொண்டிருக்கும். சகோதரர் நலம் சாதாரணமாக இருந்துவரும். வித்தியாவியாபாராதி கலைத்துறையில் சிறப்பும், ஓரளவு வருமானமும் கொடுக்கும். புத்திரர் பௌத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். தாம்பத்தியவாழ்வில் சற்றே பிணக்கும் பின் சுமுகமும் ஆகும். எல்லாப்பிரச்சினைகளிலும் அல்லல்தோன்றினும் முடிவில் திருப்திகாணும். சனீஸ்வர சகஸ்ராம அருச்சனை செய்ய நலம் தரும். செய்தொழில்கள் சிறந்து விளங்கும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

11. கும்பம் – அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி ¾
(கு. கே. – கோ. ஸ. ஸி. ஸு. – ஸே. ஸோ தா.)

கும்பராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் மேன்மை ஸ்திதியை ஏற்படுத்திக்கொண்டிருக்கும். தனவரவுகள் பெருமதிப்பாக வந்துகொண்டிருக்கும். சகோதரர் சௌக்கியத்துடனும் விசுவாசத்துடனும் இருந்துவருவர். வித்யா வியாபாராதி கலைத்துறையில் அரசாங்க செல்வாக்கைத்தரும். எல்லாவிர விருத்தியிலும் ஆதாய பிராப்தியாக இருந்துவரும். ஓர் ஆண் மகவு ஏற்படும். தாம்பத்தியவாழ்வு சுமுகமாக இருந்துவரும், செய்தொழில்களில் அலுவல்கள் விரைவாகச் செயல்பட்டுவரும். செவ்வாய் புதன் சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.
(தி. து. ஸ. ச. த. – தே. தோ. ச. சி.)

மீனராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பணச் செலாவணி சரளமாக இருந்துவரும். சகோதரர் சகோதரிகளின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். வீடு கால்நடை பிராப்தியில் 13௨ க்குமேல் ஓர் நன்மையை ஏற்படுத்தும் புத்திரரின் ஜீவனோபாயத்தில் க்ஷீணம் தோன்றினும் புத்திரஸ்தானத்துக்கு விபரீதவேதையில் குரு இருப்பதால் திடீரென ஸ்லாக்கியபலனை உண்டுபண்ணும். தன் மனைவிக்கு தேக சௌக்கியம் ஏற்படும். செய்தொழில்கள் அரசாங்க அனுகூலத்துடன் சிறப்பாக நடந்துவரும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

குமரகுருபரன்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீகாசி மடத்து முதல்வருமான ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் ஸ்ரீமத். காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ் இதழ் வெளிவருகிறது.

ஆண்டுச் சந்தா ரூ. 7—00

விலாசம் :— கௌரவ நிர்வாக ஆசிரியர்,
உயர்திருவாளர். கே. சுப்பிரமணிய பிள்ளை,
குமரகுருபரன் ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்,

(43 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சென்னை, தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலையம்

நாயன்மார்கள் குருபூஜை விழா :

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் சத்தி நாயனுர், மெய்கண்ட தேவர், பூசலார் நாயனுர், ஐயடிகள் காடவர் கோன் நாயனுர், கணம்புல்லர் இவர்கள் குருபூஜைகள் முறையே 3—11—77, 10—11—77, 12—11—77, 14—11—77, 25—11—77 ஆகிய நாட்களில் நடைபெற்றன. திரு V. N. ஆறுமுகம் அவர்கள் பெரியபுராணம் வாசித்து விளக்கம் செய்தார்கள். திருமுறை பயிலும் மாணவ மாணவிகளும், ஸ்ரீ அம்பர் குருகுலம் மாணவர் களும், அன்பர்களும் கேட்டுப் பயனடைந்தனர்.

கந்தசஷ்டி விழா :

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் கந்த சஷ்டி விழா 11—11—77 முதல் 16—11—77 முடிய உள்ள நாட் களில் சிறப்பாக நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் ஸ்ரீ செல்வ முத்துக்குமார சுவாமிக்கு நிலைய அன்பர்கள் உபயமாக சகஸ்ர நாம அர்ச்சனை நடைபெற்றது. கந்தர் அநுபூதி, திருப்புகழ் போன்ற அருட்பாடல்கள் பாராயணம் செய்யப்பட்டன. நாள் தோறும் ஸ்ரீ M. S ராஜகோபால சாஸ்திரிகள் அவர்களால் பார்வதிகல்யாணம், குமாரசம்பவம், ப்ரணவஉபதேசம், விரபாகு தூது, சூரஸம்ஹாரம், வள்ளி தெய்வயானை திருக்கல்யாணம் என்ற தலைப்புக்களில் கந்தபுராண விரிவுரை நிகழ்த்தப்பெற்றது. பலர் கேட்டுப் பயன் அடைந்தனர்.

திருக்கடவூர் சங்காபிஷேகத் தீர்த்தப்பிரசாதம் வழங்கும்விழா

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் 21—11—77, 28—11—77 ஆகிய கார்த்திகைச்சோமவார நாட்களில் திருக்கடவூரில் நடைபெற்ற 1008சங்காபிஷேகத்தீர்த்தப்பிரசாதம் முறையே 22—11—77, 29—11—77 ஆகியநாட்களில் ஸ்ரீ அன்னை அபிராமிக்கு அஷ்டோத்திர அர்ச்சனையும் திருக்கடவூர் பதிகப் பாராயணமும் செய்து வழிபாடு நிகழ்த்தி அன்பர்களுக்கு வழங் கப்பட்டது.

கிருத்திகைப்பிரசாதம் வழங்கும் விழா :

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் வைத்தீஸ்வரன்கோயில் கிருத்திகைப்பிரசாதம் வழங்கும் விழா 26—11—77 சனிக்கிழமை மாலை 7-மணிக்கு நடைபெற்றது.

ஸ்ரீ செல்லமுத்துக்குமார சுவாமியின் திருவுருவப்படத்திற்கு அர்ச்சனையும் நிலைய ஓதுவார் திரு. S ஞானப்பிரகாசம் அவர்களால் வேளூர்த்தலப்பதிகப் பாராயணமும் நிகழ்த்தப்பெற்றன. திரு. R. சிவஞானம் செட்டியார் அவர்களும் திரு. V. N. ஆறுமுகம் அவர்களும் கந்தசஷ்டி விரதத்தின் மகிமையைப் பற்றி விளக்கிப் பேசினார்கள். எல்லோரும் தருமை யாதீனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு மாதந்தோறும் நடைபெறும் இவ்விழாவில் தவறாமல் கலந்துகொண்டு பிரசாதம் பெற்று முருகன் திருவருள் பெற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள்.

மாதாந்திர சமயப்பிரசாரர வழிபாடு :

சென்னை தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தின் மாதாந்திர சமயப்பிரசார வழிபாடு 27—11—77 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 5-மணிமுதல் இரவு 9-மணி வரை சென்னை அயன்புரம் ஸ்ரீ பரசுராமலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ பரசுராமலிங்கேஸ்வரருக்கும் ஸ்ரீ பர்வதாம்பிகை அம்பாளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பட்டன. கோயிலில் உள்ள இதர மூர்த்திகளுக்கு அர்ச்சனைகள் செய்யப்பட்டன. வழிபாட்டின்போது நிலைய ஓதுவார் திரு. S ஞானப்பிரகாசம் திருமுறைப்பாராயணம் செய்தார்.

வழிபாட்டிற்குப் பிறகு சமயப்பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீ தேவி கருமாரிதாஸர் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் ‘இந்துசமயத்தில் மக்கள் இடையறாது கடவுள் வழிபாட்டில் ஈடுபடுவதற்கு ஏதுவாக ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு பண்டிகை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. குறிப்பாக இந்த வழிபாட்டில் உள்ளூர் வாசிகள் திரளாக வந்து கலந்துகொண்டிருப்பது பாராட்டுக்குரியது’ என்று சொல்லி சைவ சமயத்தின் மேன்மையை விளக்கிப் பேசினார்கள். சிம்மக்குரல் திரு. சீதாபதி அவர்கள் பேசுகையில் சைவமும்வைஷ்ணவமும் இந்துசமயத்தின் இரு கண்கள் என்றும் இருவகைவழிபாட்டிலும் எல்லாபக்தர்களும் கலந்துகொள்ளலாம் என்றும் சொன்னார். புலவர் திரு. த. கேசவன் அவர்கள் தனது உரையில் இறைவனை வழிபட அபராத அன்பும் தளராத மன உறுதியும் தேவை என்றும் அதற்கு முறையே கண்ணப்ப நாயனாரும், திருநாவுக்கரசு நாயனாரும் எடுத்துக் காட்டாக விளங்குகிறார்கள் என்றும் கூறினார்கள். முடிவில் திரு. V. N. ஆறுமுகம் அவர்கள் எல்லோருக்கும் நன்றி கூறியபின்னர் கூட்டம் நிறைவுற்றது.

துயர்துடைக்கும் பணிகளில் தருமையாதீனம்

'இயற்கையின் வலிமைக்கு முன்னே மனிதன் ஒரு துரும்பு' என்பது ஒரு பழமொழி. இதன் உண்மையை, தீபாவளிக்கு மறுநாள் 100 கி. மீ வேகத்தில், நாகைப் பகுதியைத் தாக்கிய புயலும், பெருக்கெடுத்த பெரு வெள்ளமும் நிரூபித்தன. ஆயிரக் கணக்கான மக்கள் உயிர் மற்றும் உடைமைகளை இழந்து வாடினர். நடமாடுங் கோயில் நம்பர்களுக்குச் செய்யும் உதவியே கடவுளுக்குச் செய்யும் பெரும் பூஜை என்பதை உளங்கொண்ட தருமையாதீனம், புயல் வெள்ளப் பகுதியில், இயன்றவா றெல்லாம் நிவாரணப் பணியை, உடனடியாகவும் உறுதியாகவும் மேற்கொண்டது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருள் வரலாற்றோடு நெருங்கிய தொடர்பு கொண்டது, தருமையாதீன அருளாட்சிக்கு உட்பட்ட திருக்கோளிலி (திருக்குவளை) அருள்மிகு. தியாகராஜசுவாமி தேவஸ்தானம். புயலின் பெருந்தாக்குதலில் இத்திருக்கோயில் பெரிதும் பாதிக்கப்பட்டது. இராஜகோபுர கலசம் வீழ்ந்தது. சுற்றுக் கோயில்கள் பல சீர் கெட்டன. அலுவலகக் கட்டிடம் யானைக்கொட்டகை சேதமடைந்தன. திருக்குளத்தை அழகுறுத்தி நின்ற நூற்றுக்கணக்கான தென்னைகள் வீழ்ந்தன. நந்தவனம் பொலிவழிந்தது. கொடிமரம், முன்மண்டபம் முதலியன சிதைந்தன. சேதத்தின் மதிப்பு ஐம்பதாயிரம் ரூபாய்க்கும் மேலாக இருக்கும். திருக்குவளை மற்றும் திருவாரூர் இராஜாங்கக் கட்டளைக்குமாக ஏராளமான பயன்தரும் மரங்கள் வீழ்ந்தன.

ஆதீனத் திருக்கோயில்களுக்கு இழப்புக்கள் நிகழ்ந்திருந்த போதிலும், மக்கள் துயர்துடைக்கும் பணியில் தருமையாதீனம் பின்தங்கி விடவில்லை. புயலின் கோர தாண்டவத்தால் பேரழி வுற்ற நாகையில், எல்லாவற்றையும் இழந்து வாடிய பத்தாயிரம் மக்களுக்குத் தருமை ஆதீனம் உணவளித்து உயிர்காத்தது. அடுத்து ருபாய் பத்தாயிரம் மதிப்புடைய உடைகளையும் அப்பகுதிவாழ் மக்களுக்கு அறநிலைய இலாகா வாயிலாக அளித்தது.

திருக்கோயில்கள் ஆண்டவன் பெயரால், மக்களை உய்விக் கவே எழுந்துள்ளன என்ற உண்மையைத் தமிழகத்தைச்சூழ்ந்த வெள்ளம் நிரூபித்தது. கொள்ளிட நதியில் ஏற்பட்ட பெரும் உடைப்பில் ஆச்சாள்புரப்பகுதிகள்வெள்ளக்காடாயின. ஆச்சாள் புரம் அருள்மிகு. சிவலோகத்தியாகராஜசுவாமி திருக்கோயில்

(தொடர்ச்சி 56 ஆம் பக்கம் பார்க்க)

மலை அலையில் கண்ட பெருந்தீ!

பிழைத்தோர் கூறும் அதிசயத் தகவல்கள்.

ஆந்திராவில் புயலின் விளைவாக, திவி தாலுகாவில் மலை போன்ற அலைகள் கிளம்பியது நினைவிருக்கலாம். இந்தத் தாலுகாவில் மத்திய நிபுணர்குழுவொன்று சுற்றுப்பயணம் செய்தபோது வெள்ளத்தில் உயிர் தப்பிய பல மீனவர்களும் கிராமவாசிகளும் நிபுணர்களைச் சந்தித்து மலை மலையாக அலை கிளம்பிய சமயம் தீ ஏற்பட்டதாகவும் காது செவிடு படும்படியான பெருத்த சப்தம், வெடிச் சப்தம் போலக் கேட்டதாகவும் கூறினர். இது நிபுணர்களுக்குப் புரியாத புதிராக உள்ளது.

அலைகளிலிருந்து நெருப்பு ஜுவாலை கிளம்பியதாகவும் அலைகள்மீது இந்த நெருப்புத் தோன்றிய பின்தான் பேரலைகள் தணிந்ததாகவும் கிராமவாசிகள் கூறினர்.

உஷ்ண சீதோஷ்ணம் உள்ள பகுதிகளில் பெரும் வேகத்துடன் புயல் வீசும்போது அதன் விளைவாக வெளிவிடப்படும் சக்தி 200 ஹைட்ரஜன் குண்டுகள் வெடிப்பதால் ஏற்படும் சக்திக்குச் சமம்என சோதனைக் குறிப்புக்களில் காணப்படுவதாக மத்திய விஞ்ஞான, தொழில் நுட்ப அமைச்சகத்தைச் சேர்ந்தவரும் மத்திய குழுவில் இடம்பெற்றுள்ளவருமான திரு. என். ஆர். கிருஷ்ணன் கூறினர்.

ஆகவே மணிக்கு 200 கி. மீட்டர் வேகத்தில் ஆந்திராவைப் புயல் தாக்கியபோது உண்டான சக்தியால் தண்ணீர் ஆக்ஸிஜன் ஹைட்ரஜன் மூலக்கூறுகளாகச் சிதைந்து அதன்மூலம் நெருப்பு ஏற்பட்டிருக்கலாம் என திரு. கிருஷ்ணன் கருதினர்,

இது கடல் ஆய்வு நிபுணர்களால் ஆராய்ச்சி செய்யப்பட வேண்டிய ஒரு விஷயம் என அவர் மேலும் கூறினர்.

1864ல் மச்சிலிப் பட்டினத்தைப் புயல்தாக்கியபோதும் இதே போல அலைகளினூடே நெருப்பு எழுந்ததாகக் கிழக்கிந்திய கம்பெனி ரிக்கார்டுகளில் காணப்படுகிறது என மாநில அதிகாரி ஒருவர் கூறினர்.

நன்றி! தினமணி, 29—11—77

மதிப்புரை:

தருமையாதீனம்

"ஞானசம்பந்தம் பதிப்பக"த்தின்

புதிய வெளியீடுகள்

1. திருவாசகம் (மூலம்)

சைவ - சமயாசாரியருள் நான்காமவராகிய மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய தேனினும் இனிய அருள் நூல் திருவாசகம். தாம் பெற்ற அருள் அனுபவத்தைக் கற்றோர் உள்ளம் கசியும் வண்ணம் எடுத்துரைக்கும் மாணிக்கவாசகரின் அருட்கொடை இது. எட்டாந் திருமுறையாகப் போற்றப் பெறுவது. 'திருவாசகம் என்னும் தேன்' என்பதும், 'திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்பதும் இவ்வருள் நூலின் பெருமையினை விளக்கும். தில்லைத் திருச்சிற்றம்பலவரால் தம் கைப்பட எழுதப்பெற்ற பெருஞ் சிறப்புடையது. மிகச்சிறந்த பாராயண நூல்.

இவ்வரிய திருவாசகம் இதுபோது "ஞானசம்பந்தம் பதிப்பக"த்தின் வாயிலாக நல்ல வெள்ளைக் காகிதத்தில் அழகிய பதிப்பாக வெளியிடப் பெற்றுள்ளது. பாராயணத்திற்கு வசதியாக மூலம் மட்டும் உரிய தலைப்புக்களோடு, சந்தி பிரித்து எளிதில் பொருள் உணரும்வண்ணம் வெளியிடப் பெற்றிருக்கிறது. டபுள்கிரௌன் 1—16 ல் 210 பக்கம் கொண்ட இந்நூலின் அடக்கவிலை ரூ. 1—50 மட்டுமே. சான்றிதழுடன் நூல் அஞ்சல் 0—30. பதிவு முறை அஞ்சல் 0—85.

2. இருபா இருபஃது

தோத்திரங்களும், சாத்திரங்களும் சைவத்தின் இருகண்கள் போன்றன. சைவ-சித்தாந்தச் சாத்திரங்கள் பதினான்கு. இவை மக்களைப் பிறவித் துயரிலிருந்து விடுவித்து வீடுபேற்றை வழங்கும் அருள்வலிமிக்கன. இச்சாத்திர நூல்களை அருளிய அருளாளர் அறுவர். சந்தானாசாரியர் நால்வருள் இரண்டாமவரும், மெய்கண்டதேவ நாயனாரின் முதல் மாணாக்கருமாகிய அருணந்தி சிவாசாரியர் அருளிய சாத்திர நூல்கள் இரண்டு. ஒன்று சிவஞானசித்தியார். இரண்டாவது இருபா இருபஃது. சாத்திரத் தொடர்பான வினாக்கள் சிலவற்றைத் தம்

ஆசிரியரிடம் விண்ணப்பித்து விடைபெற முயலும்பாங்கில் இந் நூல் இருபது பாடல்களில் அமைந்துள்ளது. அரிய நுட்பம் நிறைந்தது.

இவ்வரிய சாத்திர நூல் இதுபோது ஞானசம்பந்தம் பதிப்பகத்தின் மூலம், விளக்கவுரை ஆங்கில மொழி பெயர்ப்பு இவற்றுடன் வெளியிடப்பெற்றுள்ளது. பாடல்கள் சீர்பிரித்துப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. அவ்வவற்றின் விளக்கவுரை பாடல்களின் கீழேயே தரப்பெற்றுள்ளன. இவ்வரிய சாத்திர நூலுக்கு 'திருக்கோயில்' ஆசிரியரும், தருமையாதீனப்புலவரும் ஆன திரு. ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல். அவர்கள் விரிவான விளக்கவுரைக் குறிப்புக்களை எழுதியுள்ளார்கள்.

அடுத்து இதில் உள்ள இருபது பாடல்களையும், பேரறிஞர். திரு. ஜே. எம். நல்லசாமிபிள்ளை பி. ஏ., பி. எல். அவர்கள் ஆங்கிலத்தில் பாடல்களாகவே (POETRY) மொழிபெயர்த்தும், உரிய விளக்கவுரை எழுதியும் வழங்கியுள்ளார்கள். அவையும், இப்பதிப்பின் இறுதியில் முறையாகப் பதிப்பிக்கப்பெற்றுள்ளன. இவ்வுயரிய 'இருபா இருபஃது' டபுள் கிரௌன் 1—16 ல் 96 பக்கத்தில் அடக்க விலையில் ரூபாய் 1—10க்கு இப்போது உங்களுக்குக் கிடைக்கிறது. சான்றிதழுடன் நூல் அஞ்சல் 0—20. பதிவு முறை அஞ்சல் 0—75

3. சிவப்பிரகாசம்

சைவ - சித்தாந்தச் சாத்திரங்கள் பதினான்கில் ஒன்று 'சிவப்பிரகாசம், கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியர் அருளிய எட்டுச் சாத்திர நூல்களுள் ஒன்றாகத் திகழ்வது. சைவ - சித்தாந்த சாத்திர நுட்பங்களை முழுமையாக விளக்கும் நூல்கள் மூன்று. சிவஞானபோதம் சுருக்கமானது; சிவஞான சித்தியார் மிக விரிவானது. சிவப்பிரகாசம் இவ்விரண்டற்கும் இடைப்பட்டதாக விளங்குவது. நூறு பாடல்களைக் கொண்டது. சிவஞான போதத்தின் பன்னிரு நூற்பாக்களுக்கும் ஒருவகையில் விளக்கவுரைபோல் திகழ்வது. 'வேதாந்தத் தெளிவாகும் சைவ-சித்தாந்தத் திறம்' விளக்குவது.

இவ்வுயரிய 'சிவப்பிரகாச நூல்' பாடல்கள் சந்தி பிரித்து உரிய உள் தலைப்புக்கள் இட்டு, பேரறிஞர். திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை எம்., ஏ., எம். எல்.. அவர்கள் எழுதிய தெளிவுரையுடன் இரண்டாம் பதிப்பாக வெளியிடப் பெற்றுள்ளது.

டபுள் கிரௌன் 1—16 ல் 64 பக்கங்கள் கொண்ட இந்நூலின் அடக்க விலை 0—75. சான்றிதழுடன் நூல் அஞ்சல் 0—20. பதிவு முறை அஞ்சல் 0—75.

4. சொக்கநாத வெண்பா

தருமையாதீனத்தைத் தோற்றுவித்த அருளாளர் ஸ்ரீ குரு ஞானசம்பந்தர். ஸ்ரீ வில்லிபுத்தூரில் அவதரித்து, மதுரைச் சொக்கநாதர் பூஜா மூர்த்தியாகக் கிடைக்கப்பெற்று, கமலை ஞானப்பிரகாசரை ஞான குருவாக அடைந்து, தருமையில் திருமடங்கண்டு, எட்டு அருள் நூல்களை உலகுக்கு அருளிய பேரருளாளர் ஸ்ரீ குருஞானசம்பந்தர். தம் வழிபடு மூர்த்தியாகிய சொக்கநாதப் பெருமான் திருவடிகட்கு இவர்கள் சூட்டிய வெண்பா மாலையே சொக்கநாதவெண்பா. இவர்கள் பூஜா காலங்களில் ஏற்பட்ட ஞான அனுபவங்களைத் திரட்டி அவ்வப் போது வழங்கிய அனுபூதி நூல் சொக்கநாத வெண்பா. இந் நூல் செந்தமிழ்ச்சொக்கன் திருவருளையும், திருவிளையாடல்களை யும் விளக்கும் அருள் நூல். பாராயணத்திற்கு உரியது.

94 பாடல்கள் கொண்ட இவ்வருள் நூல் தருமை ஆதீனப் புலவர், சித்தாந்தக் கலைமணி, மகாவித்துவான். திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் எழுதிய தெளிவுரை குறிப்புரைகளுடன் புதிதாக வெளியிடப்பெற்றிருக்கிறது. டபுள் கிரௌன் 1—16. பக்கம் 66. விலை 0—75. சான்றிதழுடன் நூல் அஞ்சல்0—20. பதிவு முறை அஞ்சல் 0—75.

5. நவக்கிரக மாண்பு

நவக்கிரக வழிபாடு தமிழர்களால் பெரிதும் மேற்கொள்ளப் பெற்று வருவது. சூரியன், சந்திரன், அங்காரகன், புதன், வியாழன், சுக்கிரன், சனி, இராகு, கேது என்பன நவக்கிரகங் கள். இக்கிரகங்களின் சுழற்சியால் மக்கள் வாழ்க்கையில் நன்மை தீமைகள் விளைகின்றன. வழிபாடு, மற்றும் பரிகாரங்கள் செய்து, நவக்கிரகங்களைப் போற்றி மக்கள் நலம் பெற்று வருகின்றனர்.

நவக்கிரக மாண்பு என்னும் இந்நூல் நவக்கிரக பிரதிட்டை பற்றிய பல முறைகளை முதற்கண் விளக்குகிறது. அடுத்து ஒவ்வொரு கோள்கள் பற்றியும், அவ்வக்கோள்களின் தோற்றம், பெருமை, வாழ்க்கை, சிறப்பு நாட்கள், வழிபடு முறை, உரிமைப்

பொருள், கோயில் இருக்குமிடம் போன்ற பலசெய்திகள் முறையாக விளக்கப்பட்டுள்ளன. 'திருமுறைக் கலைஞர்' வித்துவான். திரு. தி. பட்டுசாமி ஓதுவார் அவர்கள், வேத - ஆகம - புராண - இதிகாசங்களிலிருந்து இந்நூலைத் தொகுத்து எழுதியுள்ளார்கள், ஒவ்வொரு கோள்களுக்கும் உரிய துதிப்பாடல்களும் இடம் பெற்றுள்ளன. திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்தின் வெளியீடாகிய இந்நூல், தருமையாதீனம் ஞானசம்பந்தம் பதிப்பகத்தில் இரண்டாம் பதிப்பாக இவ்வாண்டு திருநள்ளாறு சனிப்பெயர்ச்சி விழாவன்று வெளியிடப்பெற்றது. டபுள் கிரெளன் 1—16. பக்கம் 54. விலை. 0—60 சான்றிதழுடன் நூல் அஞ்சல் 0—20. பதிவு முறை அஞ்சல் 0—75.

— புலவர். இரா. செல்வக்கணபதி எம். ஏ.

குறிப்பு :- இந்நூல்களைப் பெறவிரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலாளர்,

ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமபுரம்

மாயூரம் (அஞ்சல்) 609 001

(51 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆதீன அருளாட்சிக்கு உட்பட்டது. தங்கள் இல்லங்களை இழந்த நூற்றுக் கணக்கான மக்களுக்கு இத் திருக்கோயிலில் புகலிடம் வழங்கியதோடு அமையாது, உணவும் வழங்கிக் காத்தது.

திருச்சி நகரில் புகுந்த வெள்ளத்தால் பாதிக்கப்பெற்ற ஆயிரக்கணக்கான மக்களுக்கு, மலைக்கோட்டையில் உள்ள தருமையாதீன மௌனமடத்தில் புகலிடம் வழங்கப்பெற்றது. திருச்சியை அடுத்த உய்யக்கொண்டான் கற்குடி கோயிலும் இப்பணியில் பெரும் பங்கு வகித்தது. மற்றும் திருப்பனந்தாள் திருக்கோயிலிலும், வைத்தீஸ்வரன்கோயில் தேவஸ்தானத்திலும் மக்களுக்குப் புகலிடம் வழங்கப்பெற்றன. திருச்சி மௌன மடத்திலும், திருப்பனந்தாளிலும் வைத்தீஸ்வரன் கோயிலிலும் ஏழைகளுக்குக் கஞ்சி வார்க்கப்பட்டது. இவ்வாறு தருமை ஆதீனத் திருக்கோயில்கள், மகேசன் திருப்பணியோடு, மக்கள் நலப் பணியையும் முன்னின்று ஆற்றியமை குறித்து அவ்வப் பகுதியில் உள்ள மக்கள் பெரிதும் மகிழ்ந்து உளநிறைவோடு ஆதீனம் பணிகளைப் பாராட்டினர்.

ஸ்ரீ தாயுமானவர்

குறிப்பு:— தருமையாதீனத்திற்குச் சொந்தமான, திருச்சிராப்பள்ளி ஸ்ரீ மௌனமடத்தில் ஸ்ரீ மௌனகுரு-ஸ்ரீ தாயுமானவர் விழா 1—2—1978 புதன்கிழமையன்று நடைபெறும். அன்று காலை ஸ்ரீ மௌனகுருவிற்கும், ஸ்ரீ தாயுமானவருக்கும் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளுடன் சிறப்பு வழிபாடும், மாலை சமய விரிவுரையும் நடைபெறும்.

உ

சிவமயம்

தருமையாதீனம்

"ஞானசம்பந்தம்" திங்கள் இதழ்

சந்தாதாரர்களுக்கு ஓர் அறிவிப்பு

தருமை யாதீனத்திலிருந்து திங்கள்தோறும் மலர்ந்து செந்தமிழ் மணமும் சிவமணமும் பரப்பி சிவஞானத்தேன் நிறைந்து கற்போர் கருத்தைக் கவர்ந்துவரும் "ஞானசம்பந்தம்" முப்பத்தாறுவது ஆண்டின் நிறைவைப்பெற்று முப்பத்தேழாவது ஆண்டில் மிக்க எழிலுடன் வெளிவருகிறது. இதுவரை ஆண்டுச் சந்தா செலுத்தாதவர்கள் ஆண்டுக் கட்டணத்தைச் செலுத்தியும் புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தும் ஞானசம்பந்தம் பெற்றுக் கற்றுப் பயனுறுவார்களாக.

வேலைமிகுதியினாலோ அல்லது மறதியினாலோ ஆண்டுச் சந்தா செலுத்துவதில் தடை ஏற்படலாம். "ஞானசம்பந்தம்" தடையில்லாமல் பெற வாய்ப்பு அளிக்கும் முறையில் ஆயுள் சந்தா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆயுள் சந்தா அறிவிப்புச் செய்தது முதல் இன்றுவரை ஐந்நூற்று முப்பத்தைந்து அன்பர்களுக்கு மேலாக ஆயுள். சந்தா செலுத்திப் பலர் ஆயுள் உறுப்பினராகி உள்ளவர்.

அன்பர்கள் பலர் ஆயுள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து "ஞானசம்பந்தம்" பெற்றுப் பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறோம். இன்றே உங்களை ஆயுள் உறுப்பினராக்கிக்கொள்ளுங்கள்.

சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா (உள்நாடு)	ரூ.	7—00
ஆண்டுச் சந்தா (சிலோன்)	ரூ.	9—00
ஆண்டுச் சந்தா (வெளிநாடு)	ரூ.	15—00
ஆயுள் சந்தா	ரூ.	100—00

அஞ்சற் செலவின் அதிகம் காரணமாக உள்நாட்டுச் சந்தாவைவிட சிலோன், வெளிநாடு இவற்றின் சந்தாத் தொகையில் அதிகம் காணப்படுகிறது.

கட்டணம் அனுப்பவேண்டிய முகவரி:—

செயலாளர்,
ஞானசம்பந்தம் செயலகம், தருமபுரம்,
மாயூரம் (அஞ்சல்) 609 001 தஞ்சை மாவட்டம்,